# எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI

குரல் 04 அதிர்வு 45 மார்ச் 2021 ethirolimelbourne@gmail.com தொ.பே:1800 960 162







# யுத்தம் ஆயுதங்களுக்குப் பிறகு தாய்மாரிடம் கையளிக்கப்படுகிறது









ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்

SRI GANESHA JEWELLERS (PVT) LTD

தாயகத்தின் கலை அம்சங்களுடன்
புதிய நகைமாடம்
டன்டிநொங்





Opening Soon

THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175
Phone no : 0387649143, Mobile no : 0450783525/ 0410955523
Email : sriganeshajewellers@gmail.com

ROYAL INTERNATIONAL MONEY TRANSFERS

EASY • FAST • SAFETY

நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டிநொங்' இல் புதியதோர் சேவை

BOC · PEOPLE'S BANK · COMMERCIAL BANK · HNB · Sampath Bank · UNION BANK · Amāna Bank It's Your Bank

Same day bank transfer

No One Beat Our Rate

THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175

(03) 87649143 0406409403
royalinfomoney@gmail.com


NEW HOMES
MULTI UNIT DEVELOPMENTS
KNOCK DOWN AND REBUILD
EXTENSIONS
FOR MORE DETAILS:
1300 01 72 72 OR 0405 079 438
INFO@PARACONSTRUCTIONS.COM.AU
WWW.PARACONSTRUCTIONS.COM.AU
PARA Constructions
VBA VICTORIAN BUILDING AUTHORITY
REGISTERED Building Practitioner
MASTER BUILDERS VICTORIA

அரசியல் என்பது யாருக்குமே கத்திமீது நடப்பதுபோன்றது. ஒவ்வொரு நாளும் வாகனத்தை எடுக்கும்போது, புதிய சாரதியாக விழிப்புடன் செயற்படவேண்டியது போன்ற ரிஸ்க்கான உத்தியோகம். அரசியல் களத்தில் நீடித்து நிலைக்கவேண்டுமென்பது, அதைவிடப்பயங்கரமானது. சவால்களை எதிர்கொள்வதற்கும் சர்ச்சை என்ற பொறிக்குள் சிக்காமல் இருப்பதற்கும் நூதன அறிவும் மண்டை நிறைந்தசமயோசிதமும் வேண்டும். இல்லாவிட்டால்,காலைவாரி குழியில்போட்டுவிட்டு தண்ணீர் தெளித்துவிடுவார்கள். அந்த தருணத்தை சிறப்பாக நிறைவேற்றுவதற்கென்றே'எதிரிகள்','துரோகிகள்' என்று பலரும் சதா ஒவ்வொரு திட்டத்தோடு முதுகுக்குப்பின்னால் பதுங்கிக்கிடப்பார்கள்.

இவ்வாறான ஒரு சிக்கலில்தான் நியூ சவுத் வேல்ஸ் மாநில எதிர்க்கட்சித்தலைவியின் தலை தமிழர் விவகாரமொன்றுடன் தொடர்புபட்டு உருளுகிறது.

அரசியல்வாதிகளை எதற்கு, எவ்வாறு அணுகுவது என்பதற்கு ஒரு ஒழுங்குமுறை இருக்கிறது. ஆனால், எம்மவர்கள் பலருக்கும் அந்த அரசயில் பண்பு பற்றிய புரிதலோ - அறம் பற்றி பார்வையோ - பல நேரங்களில் இருப்பதில்லை. ஏனெனில், புலம்பெயர் அரசியலில் நாங்கள் பழகிய பழக்கம் அப்படி.

அண்மையில்,சிட்னியில் கரும்புலிகள் தினத்துக்கு ஆஸ்திரேலிய செனெட்டர் ஒருவரை அழைத்துவந்து பேசச்சொல்லி, கையில் மைக்கை கொடுத்து, "ஏற்றி" விட்டார்கள். அவரும் தன்பாட்டுக்கு எதையோ சொல்லிவிட்டுப் போனார். தமிழ் ஊடகங்கள் எங்கும், வீரரே சூரரே என்று அவருக்கு புகழ்மாலை சூட்டி மகிழ்ந்தன.

தினங்களை நினைவுகூருவதும் அதற்குரிய மதிப்புக்களை வழங்குவதும் மிகவும் முக்கியமானதும் கடமையும்கூட. ஆனால், புலம்பெயர்ந்த தேசமொன்றில் அதனை எவ்வாறு செய்வது? யாரை அழைப்பது? இவற்றை ஒழுங்கு செய்யும்போது, அது ஒரு சமூகத்தின் மீது என்னவிதமான பார்வையை உண்டுபண்ணும்? அந்தப்பார்வை நிகழ்வின் நோக்கத்தை சிதைத்துவிடுமா? என்பவற்றையெல்லாம் புரிந்து - தெளிந்து - உணர்ந்து முன்னெடுக்கவேண்டும்.

ஆனால், டி.எம்.ரி. முறுக்குக்கம்பிகள்போல எப்போது பார்த்தாலும் விறைத்தபடி தேசியம் பேசுபவர்களிடம் இதுபோன்ற பொறுப்பான நற்காரியங்களை எதிர்பார்க்க முடியாது. ஏனெனில், அவர்களுக்கு தெரிந்ததெல்லாம் அறியாமையின் களிநடனங்கள்தான்.

சரி, இவ்வாறான ஒரு முந்திரிக்கொட்டைத்தனத்தினால், நியூ சவுத் வேல்ஸில் நடைபெற்ற இன்னொரு சம்பவத்தை பார்ப்போம்.

அதாவது, சிறுவர் பாலியல் குற்றத்தில் ஈடுபட்டதால் நீதிமன்ற தண்டனை விதிக்கப்பட்டு, சிறிலங்காவுக்கு திருப்பி அனுப்பப்படவிருந்த தமிழ் அகதி ஒருவரை விடுதலை செய்து, ஆஸ்திரேலியாவில் வசிப்பதற்கு சார்பாக கடிதம் வழங்கினார் என்ற குற்றச்சாட்டை அடிப்படையாகக்கொண்டு,நியூ சவுத் வேல்ஸ் மாநில எதிர்க்கட்சி தலைவர் ஜூடி மக்கே அம்மணிக்கு எதிராக ஆஸ்திரேலியாவின் "சனல் - 9" ஊடகம் முதன்முதலாக பெரிய குண்டொன்றை போட்டது.

அரசியல்வாதிகளின் குற்றச்செயல்களை அம்பலப் படுத்தி,அவற்றுக்கு துணைநிற்பவர்களின் முகத்திரையை கிழிக்கும்வகையில் மாநில நாடாளுமன்றத்தில் சீறிப் பாய்ந்து,அத்தகையவர்களை பதவிநீக்குமாறு கோரும் பாரம்பரியத்தை கடந்தகாலங்களில் தொடர்ந்துவந்த ஜூடி மக்கே!

இப்போது தனக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள இந்தக் குற்றச்சாட்டுக்கு என்ன பதில் சொல்லப்போகிறார்? எந்த அடிப்படையில் இப்படியான குற்றவாளிக்கு ஆதரவுக் கடிதம் வழங்கினார்? - என்று ஜூடியின் கடந்தகால நாடாளுமன்ற உரைகளை பட்டியலிட்டுக்காட்டி மேற்படி வினாவை "சனல் - 9"அம்மணியை சந்திக்கு இழுத்தது.

ஜூடி மக்கேவுக்கு நியுசவுத் வேல்ஸ் மாநிலத்தில் வாழும் பல்லின மக்கள் மத்தியில் நன்மதிப்பும் பெரும் வரவேற்பும் உள்ளது. தமிழ் மக்கள் நடத்தும் நிகழ்வுகள் மற்றும் விழாக்களில் அவர்களின் கலாசாரத்துக்கு மதிப்பளிக்கும் வகையில் உடையணிந்து செல்வதை அவர் முகநூலெங்கும் பார்த்திருக்கிறோம். தமிழ் மக்களும் அவரை தங்களில் ஒருவராக மிகவும் நேசிக்கின்றனர். இப்படியான ஜூடி ஒரு சர்ச்சையில் சிக்கியபோது, தமிழர்கள் - குறிப்பாக சிட்னி தமிழர்கள் - பேரதிர்ச்சிக்கு உள்ளானார்கள்.

சரி, அவர் எப்படி இந்த சர்ச்சைக்கு உள்ளானார் என்று பார்த்தால், கதை இப்படி நீள்கிறது.

2012 இல் இலங்கையிலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு படகு மூலம் வந்த தமிழ் அகதி ஒருவர்,மேற்கு சிட்னியில் வசிக்கும் 13 வயது சிறுமியுடன் நட்பு ரீதியாக அறிமுகமாகியிருந்தார். அதன்பின்னர்,அவர் சிறுமியின் வீட்டுக்குச்சென்று பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டார் எனக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் குறித்த நபருக்கு 12 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.



# ஜூடியின் தலையை உருட்டியது யார்? தமிழ் அகதிக்கு உதவப்போனதால் சிக்கலா?




அந்த நபர் எந்தப்பின்னணியில் குற்றஞ்சாட்டப்பட்டார் என்பதையெல்லாம் விட்டுவிடுவோம். அது வழக்கு விவகாரம்.

தண்டனை காலம் முடிந்த பிறகு குறித்த அகதி "சமூகமயப்படுத்தப்படவில்லை" என்று'விலவூட்' தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டார்.

இந்தநிலையில், தன்னை சமூகத்துடன் இணைக்கும் விஸாவை வழங்குமாறு அவர் விடுத்த கோரிக்கை விண்ணப்பத்தை குடிவரவு திணைக்களம் நிராகரித்துள்ளது. அதனை ஆட்சேபித்து அவர் administrative appeals tribunal இல் மறுபரிசீலனைக்கு விண்ணப்பத்திருந்தார். இந்த மறுபரிசீலனைக்கு வலுச்சேர்க்கும் வகையிலேயே, குறித்த அகதி சார்பாக நியுசவுத் வேல்ஸ் மாநில எதிர்கட்சி தலைவர் ஜூடி மைகேயின் அலுவலகத்திற்கு அகதிகள் சார்பு செயற்பாட்டளார் ஒருவர் சென்றிருந்தார். அகதியின் நிலை குறித்து ஆதரவு கடிதமொன்றை பெற்றுள்ளார். இக்கடிதம்தான் ஜூடி அம்மையாருக்கு தற்போது நெருக்கடியையும் தலையிடியையும் கொடுத்தது.

"நியு சவுத் வேல்ஸ் மாநிலத்திலுள்ள லேபர் கட்சி எம்பிக்கள் எவரும் நன்னடத்தை பத்திரம் வழங்குவது இல்லை. எவராவது கட்சி அலுவலகத்திற்கு வந்து தாங்களோ அல்லது தாங்கள் சார்ந்துள்ளவர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடினால், அத்தகையவர்களுக்கு'குறிப்பிட்ட நபர் எங்களுடன் இது சம்பந்தமாக கலந்துரையாடினார்' - என்று சாரப்பட மட்டுமே கடிதம் வழங்குவோம். மேற்படி தமிழ் கைதி சார்ந்து வந்தவருக்கும் அவ்வாறானதொரு கடிதேமே வழங்கப்பட்டது." - என்று ஜூடி அம்மையார் அங்கம் வகிக்கும் கட்சி தகவல்கள் தெரிவிக்கின்றன.

2011 இல் லேபர் கட்சி தலைவராக பதவியேற்ற ஜோன் ரோபேற்சன், இதேபோல கடிதம் ஒன்றை வழங்கியதால், பெருஞ்சிக்கலுக்கு உள்ளாகி, பதவியிழந்தார். ஏனெனில், கடிதம் வழங்கப்பட்டவர் யாரென்றால், மூனிஸ் என்ற பின்னாளில் - 2014 இல் - பயங்கரவாதியானவர். சிட்னி மார்ட்டின் சதுக்கத்திலுள்ள லிண்ட் உணவகத்தில் அப்பாவி பொதுமக்களை பணயக்கைதிகளாக பிடித்துவைத்து, நாடகமாடி, பெருந்தொல்லை கொடுத்து, படுகொலையானவர். இந்தப்பிரிச்சினை பின்னாளில் தோண்டியெடுக்கப்பட்டு அது சர்ச்சையாக வெடித்தபோது, ஜோன் ரோபேற்சன் பதவி துறக்க வேண்டியேற்பட்டது. இன்று செயற்பாட்டு அரசியலில் இருந்து முற்றாகவே அவர் ஒதுங்கியுள்ளார்.

இவ்வாறானதொரு பின்புலத்தில் - இந்த சம்பவத்தக்கு பிறகு - நியுசவுத் மாநில லேபர் கட்சி,எவருக்கும் நன்னடத்தை கடிதம் வழங்குவதில்லை என்ற தீர்மானத்தை ஏகமனதாக எடுத்திருந்தது.

எனவே,தாம் குறித்த தமிழ் அகதிக்கும் "நன்னடத்தை கடிதம்" எதையும் வழங்கவில்லை என்றும்,இது விடயம் தொடர்பில் எமது கட்சிக்கு படிப்பினை உள்ளது எனவும் அக்கட்சி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

ஜூடி மக்கே ஆளுமை மிக்க பெண் தலைவர். படிப்படியாக அரசியலில் வளர்ந்து இன்று எதிர்க்கட்சித்தலைவர் பதவியில் மிளிர்பவர். எதிர்காலத்தில் நியூ சவுத் வேல்ஸ் முதல்வராகும் இலக்குடன் செயற்படுபவர். இப்படியானவருக்கு - முன்னர் குறிப்பிட்டதுபோல - அரசியல் எதிரிகள் மொய்த்தபடியிருப்பார்கள் என்பது அரசியல் கற்றுக்குட்டிகளுக்கே தெரிந்த விடயம். அதுவும், அரசியலில் ஒரு பெண்ணின் முன்னேற்றத்தை எவ்வாறு பார்ப்பார்கள், எங்கு பொறி வைப்பார்கள் என்பதெல்லாம் யாருக்கும் தெரியாத ஒன்றல்ல.


இந்தப் பின்னணிகளில் ஜூடிக்கு பொறிவைப்பதற்கு குழியெதுவும் அகப்படாத நிலையில், இப்படியொரு விடயத்தை நோண்டியெடுத்து, வலதுசாரி - லிபரல் ஆதரவு ஊடகம் - அம்பலப்படுத்தி - அரசியல் ஆதாயம் தேடமுற்பட்டிருக்கிறது.

ஜூடி இதுவிடயத்தில் இன்னமும் கவனத்தோடு செயற்பட்டிருக்கலாம் என்பதற்கு அப்பால், தமிழர் தரப்பிலும் இப்படியான விடயங்களை கையாளும்போது, எவ்வளவு பொறுப்போடு அணுகியிருக்கவேண்டும் என்பது கவனத்தில் கொள்ளப்படவேண்டியது.

ஆஸ்திரேலிய தமிழர்களுக்கு தாங்கள்தான் நாட்டமை என்று சிட்னியில் கட்டப்பஞ்சாயத்து நடத்துவதற்கு செம்போடு உட்கார்ந்திருக்கும், மீட்பர்கள் இவ்வாறான விடயங்களில் என்ன பொறுப்பெடுத்திருக்கிறார்கள்?

எத்தனையோ அகதிகள் பிரச்சினைக்கு ஓடிப்போய் ஆதரவு கோருபவர்கள், இந்தப்பிரச்சினையில் தங்கள் தரப்பினை விளங்கப்படுத்தி, இதற்கும் தங்களுக்கும் தொடர்பில்லை என்றுகூறி, தனிப்பட்ட நபரது அணுகுமுறையினால், ஒரு அரசியல்வாதிக்கு நெருக்கடியை உண்டுபண்ணிய அசௌகரியத்துக்கு வருத்தமாவது தெரிவித்திருக்கவேண்டுமா?விளக்கம் கொடுத்திருக்கவேண்டுமா? ஒரு பொறுப்புள்ள சமூகமாக இதனை செய்யும்போதுதானே எதிர்காலத்தில், நியாயமான காரியங்களுக்காவது அரசியல் தரப்புக்களை அணுகமுடியும். இல்லாவிட்டால், இனி அவர்கள் எல்லோரையுமல்லவா சந்தேகத்தோடு பார்த்து, கதவுக்கு வெளியே நிறுத்தப்போகிறார்கள்?

இங்கு தங்களது சொந்தப்பிரச்சினைக்காக ஊரைக் கூப்பிட்டு, கூப்பாடுபோட்டுவிட்டு, முகநூலில் கம்பு சுத்தும், பம்மாத்து பரமசிவன்களை சமூகத்தலைவர்கள் என்று நம்பினால், இதுவல்ல நாளை இதைவிடவும் நகைப்புக்கு இடமான காரியங்கள்தான் நடந்தேறும்.


24 வருட கால
நகை
அடகுச்சேவை
Maximum Value | Quick Service | Lowest Rate
• குறைந்த வட்டி வீதம்
• கடன் தொகை படிப்படியாக
மீள் செலுத்தும் வசதி
• ஏழு நாட்களும் சேவையில்
EZY CASH PAWN SHOP
அடகுகடை
EZY CASH
Bala 0420 877 303
#Shop L01 102c, Dandenong Plaza
Shopping Centre, 49-55 McCrae Street,
Dandenong VIC 3175

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:03 அதிர்வு: 45 மார்ச் 2021 தொ.பே:1800 960162

# எஞ்சியது ஏதோ வேதனையின் வாசனைதான்!

அதிகாரத்துக்கு எதிரான போராட்டங்களின் ஆரம்பகால அணுகுமுறைகள் அஹிம்சை மார்க்கங்களாகவே இருந்திருக்கின்றன. அவை பொய்க்கின்றபோது – அந்தக்குரல்கள் மறுக்கப்பட்டுகின்றபோது – மக்கள் எழுச்சியாகி, வன்முறையை நோக்கி தள்ளப்பட்டிருக்கின்றன. உலகளாவிய ரீதியில் இடம்பெற்ற மக்கள் போராட்டங்கள் அனைத்தினதும் புரட்சி வரைபடம் இப்படியாகவே அமைந்திருக்கிறது.

அந்தவகையில், ஏப்ரல் மாதம் ஆஸ்திரேலிய தமிழர்களுக்கு எப்போதும் முக்கியமானது. மறக்கமுடியாதது. வரலாற்றுபூர்வமானது.

2009 ஆம் ஆண்டு ஈழத்தில் போர் முற்றிப் போயிருந்த காலத்தில், ஏப்ரல் மாதம் உலகெங்கிலும் பொல்லாத மணிநேரங்களாக கழிந்து கொண்டிருந்தது. நித்தமும் சாவு, நூற்றுக்கணக்கில் ஆயிரக்கணக்கில் என்று இணையத்தை நிறைக்கும் சடலப்படங்கள், திசைதெரியாத இடங்களை நோக்கி மக்கள் இடம்பெயர்வு, நிச்சயமற்ற போர்ச்செய்திகள் என்று 2009 ஆம் ஆண்டின் ஒவ்வொரு நாளும் இரத்த வாசனையோடு விடிந்து இருண்டது.

புலம்பெயர்ந்த நாடுகள் அனைத்திலும் தமிழ்மக்களின் போராட்டங்கள் எழுச்சிகண்டிருந்த காலமது. பல்லாயிரக்கணக்கான மக்கள் வீதிகளிலேயேதான் எப்போதும் நின்றுகொண்டிருந்தார்கள். நிறுத்தாமல் நிர்மூலமாக்கிக்கொண்டிருக்கும் போரின் வேகத்தினை எங்காவது ஒரு மூலையில் வைத்து முடித்துவிடமுடியாதா என்று பல்வேறு நாடுகளிலும் மக்கள் இறைஞ்சியபடியிருந்தார்கள்.

அரசியல் – இராஜதந்திர தரப்புக்களுடனான பேச்சுக்கள், உயர்மட்ட கலந்துரையாடல்கள் என்று ஒரு பக்கம் நடைபெற்றுக்கொண்டிருக்க, எதுவும் செய்யமுடியாத மக்கள் வீதிகளில் அமைதிவழிப் போராட்டங்களிலும் ஊர்வலங்களிலும் ஈடுபட்டார்கள்.

வரலாற்றில்,தமிழர்கள் செறிந்து வாழும் நாடுகள் அனைத்திலுமுள்ள வீதிகள் இந்தளவு கண்ணீரை கண்டிருக்கவாய்ப்பேயில்லை.

அந்த வரிசையில்,ஆஸ்திரேலியாவிலும் அந்தத் துயரம் எதிரொலிக்க தவறவில்லை.

மெல்பேர்ன் – சிட்னி மாநகரங்களிலுள்ள பெரு வீதிகளில் கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் நீண்ட ஊர்வலங்களில் மக்கள் திரண்டனர். ஈழத்தில் போரை நிறுத்தக்கோரும் உரத்த குரல்கள் டொலர் காதுகளை நோக்கி உரத்து எழுப்பப்பட்டன.

சிட்னியில் பிரதமர் அலுவலகத்துக்கு முன்பாகவே பலர் தொடர்ந்து காத்திருந்து, போரை நிறுத்தக்கோரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.அவ்வப்போது, தலைநகர் கன்பராவுக்கு பெருமளவிலான மக்கள் திரண்டு சென்று, நாடாளுமன்ற கட்டடத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டங்கள் செய்தார்கள். இதற்காக, மெல்பேர்னிலிருந்தும் சிட்னியிலிருந்தும் பெருந்தொகையான மக்கள் சாரி சாரியாக வாகனங்களில் சென்றனர். வேலைநாள், வேலையற்ற நாள் என்று பாராது,ஏகப்பட்ட மக்கள், உணர்வுபூர்வமாக இந்தப்போராட்டங்களில் கலந்துகொண்டனர்.

இந்தப் போராட்டங்களின் கனதி அரசின் காதுகளுக்கு கேட்கவில்லை போலிருக்கிறது என்றபோதுதான், உண்ணாவிரதப்போராட்டத்துக்கான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த உண்ணாவிரதப்போராட்டம் முதலில் சிட்னியில் ஆரம்பிக்கப்பட்டது. பிறகு, மெல்பேர்னில் ஆரம்பமானது. 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முன்னெடுக்கப்பட்ட மாநிலங்கள் தழுவிய உண்ணாவிரதப்போராட்டங்கள்,ஈழத்தில் போரை நிறுத்தக்கோரி ஆஸ்திரேலிய அரசை நோக்கிய அஹிம்சைக்குரலாக பதிவு செய்யப்பட்டதிலும் –

ஆஸ்திரேலியாவிலிருந்த புலம்பெயர்ந்த தமிழ் மக்களில் பலரது மனச்சாட்சியை தட்டியெழுப்பும் பெரும் போராட்டமாக அது விளங்கியது. தாயகத்தின் பேரழிவை தடுத்து நிறுத்துவதற்கு முயற்சிக்க வேண்டியது எந்தளவிலான வரலாற்றுக் கடமை என்பதை இந்தப்போராட்டம் ஒவ்வொரு தமிழனது மனசாட்சியிலும் ஓங்கி அறைந்தது.

ஆஸ்திரேலிய புலம்பெயர்ந்த தமிழ் வரலாற்றில் அதுவரைக்கும் வீதிக்கு வராத பல தமிழர்கள் 2009 ஆம் ஆண்டு சித்திரையில் இடம்பெற்ற உண்ணாவிரதப்போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும்வகையில், பெரும் எண்ணிக்கையில் உண்ணாவிரதப்பந்தலுக்கு வந்து கூடினார்கள்.

உண்ணாவிரதிகளுக்கு மாத்திரமல்லாமல், அங்கு கூடிய மக்களுக்கு மக்களாக ஆதரவுடன் பெருகினார்கள். வழக்கமாக நடைபெறும் சித்திரை புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் மெல்பேர்னிலுள்ள கோவில்களில் அந்த ஆண்டு அவ்வளவாக சோபிக்கவில்லை. கோவிலுக்கு சென்றவர்களும் மெல்பேர்ன் டன்டிநொாங்க் பூங்காவில் நடைபெற்றுக் கொண்டிருந்த உண்ணாவிரதப்பந்தலுக்கு வந்து குவிந்துகொண்டிருந்தார்கள்.

ஒரு கட்டத்தில் சிட்னி உண்ணாவிரதிகளும் மெல்பேர்ன் உண்ணாவிரதிகளும் தலைநகர் கன்பராவுக்கு சென்று, உண்ணாவிரதத்தை தொடர்வது, அரசுக்கு கூடுதல் அழுத்தத்தை கொடுக்கும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டபோது, உண்ணாவிரதிகள் அனைவரும் கன்பராவுக்குப் போனார்கள்.

அவர்களுடன் கூடவே, ஆயிரக்கணக்கான மக்கள் கன்பராவுக்கு விரைந்தார்கள். இரண்டொரு நாட்கள் அங்கு தொடர்ந்த உண்ணாவிரதப்போராட்டத்துக்குப் பிறகு, கன்பரா நாடாளுமன்றத்தை நோக்கி பிரம்மாண்டமான பேரணியொன்று நகர்ந்தது. ஆஸ்திரேலியத் தலைநகர் கண்ட மாபெரும் தமிழர் பேரணியென்றால், வரலாற்றில் அதுவொன்றுதான் என்றார் அங்கு வந்த பெரியவர் ஒருவர். முன்பொரு காலத்தில், ஆஸ்திரேலியாவுக்கு தூதுவராக நியமனம் பெற்ற ஜானக பெரேராவை நீக்கவேண்டும் என்று மேற்கொள்ளப்பட்ட கன்பரா பேரணிக்கு பெருமளவிலான தமிழ் மக்கள் திரண்டிருந்தார்கள் என்றாலும், இந்தளவுக்கு மக்கள் எழுச்சி கொள்ளவில்லை என்றார் அந்தப்பெரியவர்.

கன்பரா நாடாளுமன்றத்திற்கு முன்பாக பெருமளவில்கூடிய மக்களின் வேண்டுகோளை ஏற்று, அப்போதைய வெளிவிவகார அமைச்சின் உயரதிகாரி டேவிட் ஹோலி உண்ணாவிரதிகளை உள்ளே அழைத்துப்பேசினார். போரை நிறுத்துவதற்கு ஆஸ்திரேலியாவினால் முடிந்த உச்ச அழுத்தத்தினை பயன்படுத்தவேண்டும் என்றும் இவ்வளவு பெரியதொரு மனிதப்பேரழிவை பார்த்துக்கொண்டு மேற்குலகநாடு மௌனம் காப்பது மனிதாபிமானமற்ற செயல் என்றும் கூறியபோது, அவரோ "ஆஸ்திரேலியா உலக ஒழுங்கில் மத்திய அதிகாரம் கொண்ட நாடு, அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் எடுக்கின்ற நிலைப்பாடுதான் எங்களுடையது" – என்றார். "இப்போது வாழாதிருந்துவிட்டு – பல்லாயிரக்கணக்கான பொதுமக்களின் அழிவை தடுக்காமலிருந்துவிட்டு – இன்னும்பல ஆண்டுகள் கழித்து இப்போது போரை நடத்தும் மகிந்தவையோ, வேறு எவரையோ போர்க்குற்றக்கூண்டில் ஏற்றுவதில் அர்த்தம் இல்லை"– என்று எடுத்துக்கூறியபோது,"எங்களது வெளிவிகார அமைச்சர் பாகிஸ்தான் போயிருக்கிறார். என்னால் முடிந்த பதிலை உங்களுக்கு சொல்லியிருக்கிறேன். மேற்கொண்டு உங்களது விருப்பம்" – என்று கூறி கதவை சாத்தி,வழியனுப்பி வைத்தார்.

ஏமாற்றத்தோடு வெளியில் வந்த உண்ணாவிரதிகளை அழைத்துச்சென்று, இந்த அரசோடு முரண்டுபிடித்து உயிர்களை பலிகொடுக்கமுடியாது என்று கூறிய ஆஸ்திரேலிய தமிழ் சமூகத்தலைவர்கள்,தாயகத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நகர்வுகளைப்பார்க்கும்போது, நிலமை கைமீறிச்சென்றுவிட்டது என்றும், ஆஸ்திரேலியாவில் இந்தளவுக்கொரு மக்கள் எழுச்சியை ஏற்படுத்தியதே இந்த உண்ணாவிரதப்போராட்டத்தின் வெற்றியென்று கூறி, உண்ணாவிரதத்தை முடித்துவைக்கக் கோரினார்கள்.

மேற்குலக நாடொன்றில் மிரட்டி எதையும் சாதிக்கமுடியாது என்றும் ஒரு சிறிய தேசிய இனத்தின் ஆற்றலுக்கு அப்பாற்பட்டவகையில் எங்களது போராட்டம் நடைபெற்றிருக்கிறது என்றும் இதற்கு அப்பால் முறித்துக்கொள்ளுமளவுக்கு இழுத்துவிட வேண்டாம் என்றும் சமூகத்தலைவர்கள் மேலும் கேட்டுக்கொண்டார்கள்.

அன்றொரு வெள்ளிக்கிழமை. கூட்டு முடிவின்படி தங்கள் உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டார்கள் உண்ணாவிரதிகள்.

சமூகத்தலைவர்கள் ஏற்கனவே கூறியது போல, உண்ணாவிரதம் உச்சத்தை அடைந்த நாட்களிலேயே வன்னியில் கிட்டத்தட்ட போர் முடிந்துவிட்டதானது பிறகுதான் புரிந்தது. அடுத்த மாதம் மிச்சம் மீதியிருந்தவற்றையும் கூட்டித் துடைப்பதுபோல அழித்து ஒழித்தார்கள். பல்லாயிரக்கணக்கான மக்களின் சடலங்களின் மீது, ஒரு தேசிய இனத்தின் பூர்வீக நிலம் சாம்பர் மேடானது.

அந்த அழிவைத்தடுப்பதற்கு உலகெங்கும் வடித்த கண்ணீருக்கும் தொண்டை வற்றக்கத்திய குரல்களுக்கும் எந்தப்பெறுமதியும் இல்லாமல் வரலாறு மறுபக்கம் திரும்பிக்கொண்டது.

அன்று ஆஸ்திரேலியத் தமிழர்கள் வடித்த அந்தக் கடைசிக்கண்ணீருக்கு இன்று வயது 12. கனவுகளுக்கும் கண்ணீருக்கும் திவசநாள் வைத்து நினைவுகூருகின்ற துயரத்தை மாத்திரமே கலண்டர்கள் கைளில் கொடுத்திருக்கின்றன.

அன்றுடன் வற்றியது தமிழர்களது கண்ணீர் மாத்திரமல்ல, ஆஸ்திரேலிய தமிழர்கள் மத்தியிலிருந்த இறுக்கமான ஒற்றுமை. எவ்வளவு முரண்பாடுகள் – வேற்றுமைகள் – இருந்தாலும் ஓரணியில் திரண்ட உறுதிப்பாடு. எல்லாவற்றுக்கும் மேலாக, அதனைப்பேணுவதற்கு ஆளுமையுடன் நம் மத்தியிலிருந்த சில தலைமைகள்.

இன்று எஞ்சியிருப்பது பெருங்காயப்பேணிபோல வெறும் வாசனை மாத்திரமே!

# Sai Shree Foods Pty. Ltd.

**AUSTRALIA - CANADA - INDIA**

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.





**If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.**

**We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)**

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

# சிறுபான்மை இனங்களில் “பிரித்து” ஓதும் சுருதி மாறாத பௌத்த சங்கீதம்!





இலங்கையில் அரங்கேறிய **21-4** பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்டிருந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி விசாரணை அறிக்கை வெளிவந்துள்ள நிலையில், அது தொடர்பில் பல கோணங்களில் கருத்துகள் முன்வைக்கப்பட்டுவருகின்றன. அறிக்கையின் உள்ளடக்கங்கள் தொடர்பில் தேசிய ரீதியில் மட்டுமல்ல, அனைத்துலக மட்டத்திலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

முழுமையான விசாரணை அறிக்கையும் அதன் இணைப்புகளும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிடம் கையளிக்கப்பட்டிருந்தாலும், பிரதான அறிக்கை மட்டுமே மக்கள் மயப்படுத்தப்பட்டுள்ளது. அறிக்கையின் இணைப்புகள் பகிரங்கப்படுத்தப்படவில்லை. இதனால், சாட்சியங்கள் உட்பட மேலும் சில விடயங்களை தெளிவாக அறிந்துகொள்வதற்கு முடியாமல் இருப்பதாக சட்ட நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

ஆனால், நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக சட்டமா அதிபரிடம் இறுதி விசாரணை அறிக்கையும், அனைத்து இணைப்புகளும் கையளிக்கப்பட்டுள்ளன என்று அரச தரப்பு விளக்கமளித்துள்ளதுடன், இத்தாக்குதலின் பின்னணியை மூடி மறைப்பதற்கோ அல்லது தொடர்புபட்டவர்களை பாதுகாப்பதற்கோ தமக்கு எவ்வித தேவைப்பாடும் கிடையாது எனவும் உறுதியளித்துள்ளது.

எனினும், அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படுமா என்ற சந்தேகம் தற்போதே மேலோங்கியுள்ளது. ஏனெனில், அறிக்கையிலுள்ள பரிந்துரைகள் முழுமையாக அமுல்படுத்தப்படமாட்டாது எனவும், ஆணைக்குழு அறிக்கையை முழுமையாக ஏற்கவேண்டும் என்பது கட்டாயமில்லை எனவும் ஆளுங்கட்சியினர் பஜனை பாடத் தொடங்கியுள்ளனர். அதுமட்டுமல்ல, தேசிய பாதுகாப்பு, புலனாய்வு தகவல்கள் உட்பட மேலும் சில விடயங்களைக்காரணம் காட்டி இணைப்புகளிலுள்ள விடயங்களை பகிரங்கப்படுத்தாமல்கூட இருக்கலாம்.

**21-4** பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பில், அடி முதல் முடிவரை எல்லா காரணங்களும் கண்டறியப்படும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் வாக்குறுதி வழங்கியது. நல்லாட்சி அரசு வீட்டுக்கு செல்வதற்கும் கோட்டா அரசு ஆட்சிபீடமேறுவதற்கும் **21-4** தாக்குதலும் ஓர் பிரதான காரணமாக அமைந்தது. ஆகவே, இது விடயத்தில் பொறுப்புக்கூறலில் இருந்து நழுவாமல், அனைத்து காரணிகளும் கண்டறியப்பட வேண்டும் என்பதுதான் கத்தோலிக்க மக்களின் ஏகோபித்த எதிர்ப்பார்ப்பாகும்.

**21-4** பயங்கரவாதத் தாக்குதல் நடைபெற்று, வரும் ஏப்ரல் **21**ஆம் திகதியுடன் ஈராண்டுகள் நிறைவுபெறவுள்ள நிலையில், ஏப்ரல் **21** ஆம் திகதிக்கு முன்னர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி அவசியம் எனவும், தாக்குதலுடன் தொடர்புபட்ட அனைவருக்கும் தண்டனை வழங்கப்படவேண்டும் எனவும் கறுப்பு ஞாயிறை பிரகடனப்படுத்தி கத்தோலிக்க மக்கள் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர்.

எப்ரல் **21** ஆம் திகதிக்குள் நீதி நிலைநாட்டப்படுமா, குற்றவாளிகளுக்கு உரியதண்டனை வழங்கப்படுமா, அறிக்கையிலுள்ள பரிந்துரைகளை அமுலாக்கும்போது எழக்கூடிய சிக்கல்கள் எவை என்பன உட்பட மேலும் சில விடயங்களை இனி ஆராய்வோம்.

### தாக்குதலும் ஆரம்பக்கட்ட விசாரணைகளும்

**2019** ஏப்ரல் **21** - ஈஸ்டர் திருநாளன்று இலங்கைத் தீவில் பீறிட்டு தெறித்த இரத்தம் அனைவரையும் அதிர்ச்சியில் உறையவைத்தது. ‘மதவாதம்’ என்ற போதை தலைக்கேற, பிசாசுகளாகமாறி - பயங்கரவாத கும்பல் - நடத்திய மரண வேட்டையில் மக்கள் கொத்துக்கொத்தாக கொல்லப்பட்டனர்.

கருத்தரித்திருந்த தாய்மார் முதல் கனவுகளை சுமந்த சிறார்கள்வரை **300** பேர் உடல்சிதறிப் பலியானார்கள். **477** இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இவர்களில் சிலர் உடல் அவயங்களை இழந்து, வலிகளை சுமந்தப்படி வாழ்வதை இன்றும் காணக்கூடியதாக இருக்கின்றது.

மரணத்தை வீழ்த்தி, பாவத்தை ஒழித்து, இருளை வெற்றிகொண்ட இயேசுநாதர் உயிர்த்தெழுந்த நாளில், தேவாலயங்களுக்குள் இரத்த ஆறு பெருக்கெடுத்த பெருந்துயர் சம்பவமானது இலங்கையை மட்டுமல்ல முழு உலகத்தையுமே உலுக்கியது.

தாக்குதல் நடைபெற்று **24** மணிநேரத்துக்குள் தாக்குதல் நடத்தியவர்களின் விவரம் கண்டறியப்பட்டதுடன், **72** மணிநேரம் முடிவடைவதற்குள், சி.ஐ.டி மற்றும் ரிஐடியினர் விசேட குழுக்களை அமைத்து, தேடுதல் வேட்டையில் இறங்கினர். தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்றும் அமைக்கப்பட்டது.

இவ்வாறுபலமுனைவிசாரணைகள்நடைபெற்றநிலையில், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவே பெரும்பாலானவர்களின் கவனத்தை ஈர்த்தது. புலனாய்வுத்துறை பிரதானி, படைஅதிகாரிகள் உட்பட பலர் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் விசாரணை அறிக்கை வெளிவந்திருந்தது. ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பாதுகாப்பு செயலாளராக இருந்த ஹேமசிறி, பொலிஸ்மா அதிபராக இருந்த பூஜித உள்ளிட்டவர்கள்மீது கடும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. ஆனால் தாக்குதலின் பின்புலம் கண்டறியப்படவில்லை. பிரதான சூத்திரதாரிகளும் அடையாளப்படுத்தப்படவில்லை.

இந்நிலையில், தம்மீது குற்றச்சாட்டுகளை அடுக்கிய மேற்படி விசாரணை அறிக்கையை மைத்திரிபால சிறிசேன நிராகரித்தார். அதுமட்டுமல்ல, அடி முதல் முடிவரை எல்லா விடயங்களையும் கண்டறிவதற்காக ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றையும் அமைத்தார். அந்த குழுவின் அறிக்கையே தற்போது வெளிவந்து, மைத்திரியின் கழுத்திலேயே கத்தியை வைத்துள்ளது.

ஈஸ்டர் தினத்தன்று பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்படவுள்ளது, எந்தெந்த இடங்களில் அந்த தாக்குதல் நடத்தப்படும், தாக்குதல்களை நடத்தும் நபர்கள் யார் என்பன உள்ளிட்ட தகவல்களை இந்திய உளவு பிரிவு, இலங்கை புலனாய்வு துறையிடம் முன்கூட்டியே கையளித்தும், தாக்குதல்களைத் தடுத்து நிறுத்துவதற்கு ஏன் முடியாமல்போனது என்ற வினாவுக்கு இன்னும் உறுதியான பதில் இல்லை.

கவனயீனம், அசமந்தபோக்கு, அரசுக்குள் இருந்த குழப்பம் உள்ளிட்ட காரணங்களால் இவ்வாறு நடைபெற்றிருக்கலாம் என மனதுக்கு ஆறுதல் கூறிக்கொண்டாலும், உண்மை வெளிவரும்வரை மனம் உறுத்திக்கொண்டே இருக்கும்.

குறிப்பாக **21-4** பயங்கரவாதத் தாக்குதல்கள் நடைபெறுவதற்கு முன்னர், **9** முக்கிய சம்பவங்கள் இடம்பெற்றன. அவை தொடர்பில் உரியவகையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தால், தாக்குதலை தடுத்திருக்கலாம் என்பதே பொதுவான கருத்தாகும். அந்த **9** சம்பவங்களையும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர அண்மையில் நாடாளுமன்றத்தில் பட்டியலிட்டார்.

(09ஆம் பக்கம் பார்க்க)

# சிறுபான்மை இனங்களில்
# "பிரித்து" ஓதும் சுருதி மாறாத பௌத்த சங்கீதம்!



(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

**தவறவிடப்பட்ட 9 சம்பவங்கள்**

2018 பெப்ரவரி 6 ஆம் திகதி நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் உறுப்பினர் அப்துல் பர்ஷாட்டின் வீடு மீது குண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. குறித்த சம்பவம் நடைபெற்று 6 நாட்களின் பின்னர் காத்தான்குடியிலுள்ள அக்கட்சியின் அலுவலகம்மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

மேற்படி சம்பவங்கள் அரங்கேறி 6 மாதங்களுக்கு பிறகு மட்டக்களப்பு பாலமுனை பகுதியில் வெடி பொருள் பரிசோதனையின்போது சஹ்ரானின் சகோதரர் ரில்வான் படுகாயமடைந்தார். கொழும்பில்கூட அவருக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. வெடி பொருட்களால் ஏற்பட்ட காயம் என மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தும், அதன் பின்புலம் கண்டறியப்படவில்லை.

இச்சம்பவம் நடைபெற்று இரண்டரை மாதங்களுக்கு பின்னர் பயிற்சி முகாம்கள் தொடர்பான தகவல்கள் வெளியாகின. இது தொடர்பில், விசாரணைக்குச் சென்ற அதிகாரிகள் வெறுங்கையுடன் திரும்பினர்.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் வவுண தீவில் பொலிஸ் அதிகாரிகள் இருவர் கொடூரமாக கொல்லப்பட்டனர். இந்தச்சம்பவம் தொடர்பில், முன்னாள் புலி உறுப்பினர்கள்மீது குற்றம் சுமத்தப்பட்டு விசாரணைகள் மறைக்கப்பட்டன. இது தொடர்பில் கைதுகள்கூட இடம்பெற்றிருந்தன. சிலவேளை பொலிஸ் அதிகாரிகள் இருவரைக் கொன்றது யார் என்பதை கண்டறிந்திருந்தால், அவர்களின் எதிர்காலத் திட்டம்கூட கசிந்திருக்கலாம்.

இக்கொலைச்சம்பவம் இடம்பெற்று ஒரு மாதத்துக்கு பின்னர் மாவனல்லை பகுதியில் புத்தர்சிலை சேதமாக்கப்பட்டது. மூன்று வாரங்களுக்கு பிறகு வனாத்தவில்லு பகுதியில் வெடிபொருட்கள் மீட்கப்பட்டன. இச்சம்பவம் இடம்பெற்று 2 மாதங்களுக்கு பிறகு தஸ்லீம் என்பவர்மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

அதேபோல 21-4 தாக்குதலுக்கு 5 நாட்களுக்கு முன்னர் காலங்குடா பகுதியில் மோட்டார் சைக்கிளை வெடிக்க வைத்தனர்.

இவ்வளவு சம்பவங்கள் நடைபெற்றும் ஏன் உண்மை கண்டறியப்படவில்லை? எனவேதான் இதன் பின்புலம் குறித்து சந்தேகம் எழுகின்றது. அரசியல் கரம்கூட இருந்திருக்கலாம் என கத்தோலிக்க மக்களால் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

21-4 தாக்குதல் சம்பவத்தின் பிரதான சூத்திரதாரி சர்ஹான் என ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், சஹ்ரானையும் சிலர் வழிநடத்தியுள்ளனர் என்ற உண்மையை பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர வெளிப்படுத்தினார். அவர் ஒரு சிலரின் பெயர்களைக் குறிப்பிட்டிருந்தாலும், உண்மையான சூத்திரதாரிகள் அவர்களா என்பது சந்தேகமே என்று எதிரணி உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

**சஹ்ரானை வழிநடத்தியது யார்?**

2014 ஆம் ஆண்டு இஸ்லாமிய அரசுக்கான பிரகடனத்தை ஐ.எஸ். அமைப்பின் தலைவர் அபுபக்கர் அல்-பாக்தாத் வெளியிட்டார். அத்துடன், சிரியா, ஈராக் வந்து, இஸ்லாமிய அரசுக்காக சமராடுமாறு அறைகூவல் விடுத்தார். ஐ.எஸ். அமைப்பின் தலைவரின் இந்த அறிவிப்பையடுத்து 2015 ஜனவரி மாதமளவில் இலங்கையிலிருந்து சுமார் 37 பேர் சிரியா சென்று, ஐ.எஸ். அமைப்புடன் இணைந்து செயற்பட்டனர். இஸ்லாமிய அரசு குறித்து அடிப்படைவாதிகள் பரப்புரைகளை முன்னெடுத்தனர்.

சஹ்ரானும் இஸ்லாமிய அரசு கோட்பாடுக்காக செயற்பட்டு, மத அடிப்படைவாதியாகவே மாறினார். 2017 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் மத அடிப்படைவாதத்திலிருந்து வன்முறையை நோக்கி அவர் பயணித்தார். 2017 ஆம் ஆண்டு மார்ச் 10 ஆம் திகதி காத்தான்குடியில் மாற்றுக்கருத்துடையவர்களை தாக்கியமையே சஹரானின் முதலாவது வன்முறைச் சம்பவமாகும்.

அதேவேளை, நீண்டகாலமாக கட்டாரில் இருந்து, தற்போது கைதாகியிருக்கும் மொஹமட் இப்ராஹிம், மொஹமட் நௌபர் என்பவர், 2016 ஆம் ஆண்டிலிருந்து சஹ்ரானுடன் நெருங்கிய தொடர்பை பேணிவந்துள்ளார். ஐ.எஸ். தலைவரின் கருத்தியலுடன் சஹ்ரானை இவரே தொடர்புபடுத்தியுள்ளார்.

சஹ்ரானுடன் தொடர்பை ஏற்படுத்தி, தாக்குதல்வரை சஹ்ரானை கருத்தியல் ரீதியில் அவரே வழிநடத்தியுள்ளார். சி.ஐ.டி. மற்றும் ரி.ஐ.டி. ஊடாக முன்னெடுக்கப்பட்டுவரும் விசாரணையில் இது உறுதியாகின்றது. இதன்படி 21-4 தாக்குதலின் பின்னணியில் இருந்த பிரதான அடிப்படைவாதியும் சஹ்ரானை வழிநடத்தியவராகவும் நௌபர் கருதப்படுகின்றார். அத்துடன், இந்தியாவில் உள்ள மௌலவி ஒருவரின் பெயரும் அடிபடுகின்றது.

தாக்குதலுக்கு முன்னர் சஹ்ரான் உள்ளிட்ட குழுவினர், ஐ.எஸ். அமைப்பின் அபுபக்கர் அல்-பாக்தாத்தான் தமது தலைவர் என உறுதியெடுத்தனர். இஸ்லாம் அரசுக்காகவே இத்தாக்குதல் என்பதனை உறுதிப்படுத்தியுள்ளனர் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

**சர்வதேச விசாரணை வேண்டுமா?**

உண்மையை ஒருநாளும் மூடி மறைக்க முடியாது. என்றாவது ஒருநாள் அது தனக்கே உரிய பாணியில் வீறுகொண்டு எழும் என கூறப்பட்டாலும், அரசியல் அழுத்தங்கள், தலையீடுகள் மூலம் உண்மையை மூடி மறைக்கலாம். திசை திருப்பலாம் என்ற நிலை இலங்கையில் காணப்படுகின்றது. ஊடகவியலாளர்களைக் கொலை செய்தவர்கள் இன்னும் தண்டிக்கப்படவில்லை. அப்பாவி மக்களை கொன்றவர்களுக்குகூட பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே 21-4 தாக்குதல் தொடர்பில் நீதி நிலைநாட்டப்படுமா என்ற சந்தேகம் உள்ளது.

எனவேதான் 21-4 தாக்குதல் தொடர்பில் எதுவும் மூடிமறைக்கப்படக்கூடாது எனவும், அவ்வாறு நடந்தால் சர்வதேசத்தை நாடவேண்டிவரும் எனவும் பேராயர் மல்கம் ரஞ்சித் எச்சரிக்கை விடுத்துள்ளார். இதன்படி நம்பகத்தன்மையை வெளிப்படுத்துவதற்கு அரசு முயற்சித்தால்கூட 'தேசிய பாதுகாப்பு' என்ற போர்வையில் சில விடயங்கள் மறைக்கப்படக்கூடும் என்றே நம்பப்படுகின்றது.

குறிப்பாக சாரா என்ற பெண்மணி, இந்திய உளவு அமைப்பின் உளவாளி எனவும் அவர் தாக்குதலின் பின்னர் இந்தியா சென்றுள்ளார் எனவும் தகவல்கள் வெளியாகின. எனினும், சாரா என்பவர் இந்தியா சென்றுள்ளதற்கான உத்தியோகப்பூர்வ ஆதாரம் எதுவும் இல்லை என அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான உதய கம்மன்பில குறிப்பிட்டுள்ளார். தாக்குதலின் பின்னர் சாரா எப்படி தப்பினார் என்பதற்கான பதில் இன்னும் இல்லை.

அதேபோல, இந்திய தூதரகம் மற்றும் இந்திய நிறுவனமொன்றுக்கு சொந்தமான ஹோட்டல்கள்மீது ஏன் தாக்குதல் நடத்தப்படவில்லை என்ற வினாவை சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் எழுப்பியிருந்தார்.

மறுபுறத்தில், தாக்குதலின் பின்னணியில் இந்தியா இருக்கக்கூடும் என்ற குற்றச்சாட்டும் உள்ளது. ஆனால், இந்தியா அதனுடன் தொடர்புபடவில்லை எனவும், அவ்வாறு தொடர்புபட்டிருந்தால் அந்நாடு எதற்கு புலனாய்வு தகவல்களை வழங்கவேண்டும் எனவும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வினா எழுப்பியிருந்தார்.

**முஸ்லிம் மக்கள் வேட்டையாடப்படுவது ஏன்?**

இதேவேளை, ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையில் பொதுபல சேனா உள்ளிட்ட அடிப்படைவாத அமைப்புகளை தடைசெய்யவேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

உண்மையில், ஹலாலில் ஆரம்பமான முஸ்லிம் எதிர்ப்பு நடவடிக்கை, படிப்படியாக உச்சம்தொட்டு, இறுதியில் கலவரமாகக்கூட மாறியது. முஸ்லிம் மக்களுக்கு எதிராக திட்டமிட்ட அடிப்படையில் பொதுபலசேனா உள்ளிட்ட சிங்கள தேசியவாத அமைப்புகள் வன்முறைகளைக் கட்ட விழ்த்துவிட்டன. முஸ்லிம் இளைஞர்கள் வன்முறையை வழியைத் தெரிவுசெய்வதற்கு இத்தகைய அமைப்புகளின் செயற்பாடுகளும்கூட பிரதான காரணம் என்றே சொல்லவேண்டும். அந்தவகையில், ஜனாதிபதி ஆணைக்குழு முன்வைத்துள்ள பரிந்துரை வரவேற்கத்தக்கது. ஆனால், பொது பலசேனாவை தடைசெய்ய முடியாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

போர்காலத்தில் அரசுக்கும், அரச படைகளுக்கும் முஸ்லிம் மக்கள் முழுமையான ஆதரவை வழங்கினர். பாற்சோறு சமைத்து, பட்டாசுக்கொளுத்திக்கூட போர் வெற்றி விழாவை கொண்டாடினர். பெரும்பான்மையின மக்களுக்கு அதீத விசுவாசத்தை வெளிப்படுத்திய அவர்கள், தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறை, நாளை தம்பக்கம் திரும்பும் என்பதை உணராது செயற்பட்டனர்.

பொருளாதார ரீதியில் தம்மை பலப்படுத்திக்கொண்ட முஸ்லிம் மக்கள், மதத்தையும் உயிருக்கு மேலாகக் கருதினர். நடந்து செல்லும் தொலைவில் ஒரு பள்ளிவாசல் இருந்தால்கூட தமது ஊரில் ஒரு பள்ளியை அமைக்க வேண்டும் என்பதில் குறியாக இருந்தனர். தமது பகுதிகளில் உள்ள காணிகளை முஸ்லிம் அல்லாதவர்களுக்கு விற்கக்கூடாது என்ற கொள்கையில் இருந்தனர்.

நாட்டுக்கென சட்டம் இருக்கையில் ஷரியா சட்டமே மேலானதாக கருதி செயற்பட தொடங்கினர். அரபு நாட்டுக் கலாச்சாரத்தை இலங்கையிலும் கோலோச்சுவதற்கு நடவடிக்கை எடுத்தனர். இவ்வாறான நடவடிக்கைகள்தான் சிங்கள மக்களை சினம்கொள்ள வைத்தது. அவர்களும் தேரர்கள் ஊடாக அதனை வெளிப்படுத்தினர். உணவில் ஆரம்பமான எதிர்ப்பு, இன்று உடையில் வந்து நிற்கின்றது. இன்று பர்காவை தடைசெய்வதற்கான நகர்வு இதன் ஓர் அங்கமே.

21-4 தாக்குதலுக்கு சர்வதேச விசாரணை கோரும் பேராயர், இறுதிக்கப்பட்டப்போரின்போது நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு சர்வதேச விசாரணைகோரும்போது அதனை ஆதரிக்க மறுப்பது ஏன் என்பது இந்த ஒட்டுமொத்த விவகாரங்களின் பின்னணியில் உள்ள இன்னொரு கேள்வியாகும்.

ஒட்டுமொத்தத்தில் பார்க்கும்போது, தங்களுக்குள் ஒற்றுமையில்லாத சிறுபான்மையினங்களின் பிளவுகளும் பெரும்பான்மை - சிங்கள இனவாத - அரசுக்கு சிம்பிளாக சிக்ஸர்கள் அடிப்பதற்கு பேருதவிகளாக அமையப்பெற்றிருக்கின்றன.

ஒவ்வொரு சிறுபான்மையினமாக அடித்து, ஒதுக்கி, தனது மேலாண்மையை திமிரோடு அரங்கேற்றுவதற்கு தனது, பௌத்த நரம்புகள் ஒவ்வொன்றிலும் சுருதி சேர்த்தபடி சிங்கள தேசம், "பிரித்து" ஓதிக்கொண்டிருக்கிறது.

ஆஸ்திரேலியாவின்
கோவிட்-19
தடுப்பூசித் திட்டம்


# கோவிட்-19 தடுப்பூசிகளைப் பற்றி தெரிந்துகொள்ளுங்கள்.

## பிந்திய தகவல்களைப் பெற்றுக்கொள்ள **health.gov.au** என்ற இணையத்தளத்திற்குச் செல்லுங்கள்

ஆஸ்திரேலியாவில் உள்ள ஒவ்வொருவருக்கும் பாதுகாப்பான, செயல்திறன்மிக்க மற்றும் இலவசமான கோவிட்-19 தடுப்பூசிகள் கிடைப்பதை உறுதிசெய்ய நாங்கள் பணியாற்றி வருகிறோம். எமது அன்றாட வாழ்க்கைக்குத் திரும்புவதற்கான பாதுகாப்பை தடுப்பூசிகள் நமக்கு கொடுக்கும்.

தடுப்பூசி குறித்த முன்னேற்றம் தொடர்பில் உடனுக்குடன் அறிந்துகொள்ளவும், உங்களுக்குத் தெரியும் தகவல் நம்பகமானதா என்பதை உறுதிப்படுத்தவும் **health.gov.au/covid19-vaccines**- க்குச் செல்லுங்கள்.

மேலதிக தகவல்களுக்கு National Coronavirus Helpline—ஐ **1800 020 080** என்ற இலக்கத்தில் அழைக்கலாம். மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைப்பு சேவைகளுக்கு **131 450**-ஐ அழையுங்கள்.




**COVID-19 VACCINATION**

**பாதுகாப்பானது. செயல்திறன்மிக்கது. இலவசமானது.**

Australian Government




# 2011-2021 பறிபோன தமிழக உரிமைகள்

● அ.முத்துக்கிருஷ்ணன்

தமிழகம் இந்தியாவின் முன்னோடி மாநிலங்களில் ஒன்று, நீதிக் கட்சி காலத்தில் தொடங்கி,சுதந்திர இந்தியாவின் ஒரு மாநிலமாக உருப்பெற்று,தொடர்ந்து இந்த நிலம் இந்தியாவின் வழிகாட்டி மாநிலமாகவே திகழ்ந்துள்ளது. மாநில சுயாட்சி எனும் முழக்கம் இந்த மண்ணில் இருந்துதான் ஓங்கி ஒலித்தது. அப்படி இந்தியாவின் உரிமைக் குரலாகவே விளங்கிய ஒரு மாநிலம்,கடந்த பத்து ஆண்டுகளில் பெரும் வீழ்ச்சிகளை சந்தித்துள்ளது. அதிலும் குறிப்பாக,கடந்த ஐந்து ஆண்டுகளில் எடப்பாடி தலைமையிலான அரசு இந்த மாநிலத்தின் வரலாற்றுப் பயணத்தை திசைதெரியாது திகைத்து நிற்கும் அளவிற்கு மாற்றிவிட்டது. ஒரு மாநில அரசின் உரிமைகள் பறிபோவது என்பது,அந்த மாநில மக்களின் உரிமைகள் பறித்தது மாத்திரமல்லாமல், அம்மாநில மக்களின் வாழ்க்கை தரத்தை, வாழ்வாதாரத்தையும்கூட வெகுவாக பாதித்துள்ளது.

தமிழக அரசின் வெற்றிப்பயணம் என்பது இந்த மாநிலம் முழுமையிலும் உள்ள மக்கள், சமூக நீதியுடன்கூடிய வாழ்கையை உத்தரவாதப்படுத்திய பயணம். இங்கே உள்ள தொடர்ச்சியான அரசுகள் போட்டி போட்டுக்கொண்டு மக்களுக்கு அதன் பலன்களை பிரித்துக்கொடுத்தது, அதன் பகிர்வில் ஒரு சமூக நீதி பொதிந்திருந்தது என்பதை உலக அளவிலான ஆய்வு நிறுவனங்கள் எடுத்துரைத்துள்ளன.

ஜி.எஸ்டி, நீட் மற்றும் பொது விநியோகம் ஆகிய மூன்று துறைகளில் பறிபோன உரிமைகளை இந்த அத்தியாயத்தில் பார்ப்போம்:

## ஜிஎஸ்டி:

“ஒரே நாடு - ஒரே வரி”என்னும் ஒன்றிய அரசின் புதிய வரிவிதிப்பு கொள்கைப்படி, இதுவரை ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் விதிக்கப்பட்ட பல்வேறு வரிகள் ஒருங்கிணைக்கப்பட்டு “ஜிஎஸ்டி - சரக்கு மற்றும் சேவை வரி”என்ற பொதுப்பெயரில் ஒன்றிய அரசே வரிவசூல் செய்யும் புதிய நடைமுறையே ஜிஎஸ்டி வரிவிதிப்பு ஆகும்.

‘இந்தியா என்பது மாநிலங்களின் ஒன்றியம்’ என்று அரசியல் சட்டத்தின் முதல் கூறு (1-ம் எண்) தெரிவிக்கிறது. இந்தப் பரந்த நோக்கத்துக்கு முரணாக ஜிஎஸ்டி இருக்கிறது.

இந்த புதிய ஜிஎஸ்டி சட்டத்தை எந்தக் கோணத்திலிருந்து பார்த்தாலும்,அரசியல் சட்டத்தை வகுத்தவர்கள் மிகக் கவனத்துடன் மாநிலங்களுக்கு அளித்த வரி விதிப்பு உரிமைகளையும், நிதி நிர்வாகத்தில் அளித்த சுதந்திரத்தையும் குறைத்திருப்பது தெரிகிறது.

இந்த சட்டத்தின் காரணமாக,எந்த மாநிலமும் தன்னுடைய மாநிலத்தின் தனித் தன்மைக்கு ஏற்பவோ, அல்லது மக்களின் தேவைகளுக்காகவோ இனி வரிவிதிக்க முடியாது.

மாநில அரசின் ஒட்டுமொத்தமாக நிதி ஆதாரங்களை முடக்குவதன் மூலமாக,தனித்து செயல்பட முடியா-மல் ஆக்குவதால்,மாநில அரசின் திட்டங்களை செயல்படுத்துவதில் தேக்கம் நிலவுகிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு சுயமாக செயல்பட முடியாத அளவிற்கு கைகள் கட்டப்பட்ட நிலையில் உள்ளது. இந்த வரி விதிப்பிலிருந்து ஒன்றிய அரசு மாநிலங்களுக்கு ஒதுக்க வேண்டிய தொகைகளையும் கிடப்பில் போட்டு, மாநிலங்கள் மத்திய அரசிடம் கையேந்திக் கேட்கும் அளவிற்கு மாநில உரிமைகளை ஒன்றிய அரசு நசுக்கியுள்ளது.

ஜிஎஸ்டி அறிமுகப்படுத்தப்பட்டதும், அதன் மூலம் ஏற்பட்ட இழப்பை ஈடுகட்டும் வகையில், வருவாயில் ஒரு குறிப்பிட்ட - குறைந்தபட்ச - தொகையை ஒவ்வொரு மாநிலத்துக்கும் 2022 வரையிலும் தருவதாக 2017 இல் ஒன்றிய அரசு மாநிலங்களுக்கு உறுதியளித்தது. ஜிஎஸ்டி வரியானது இந்த உறுதிமொழியிலிருந்தே இறுதி வடிவம் கண்டது. ஆனால், இந்த உறுதி மொழியை நிறைவேற்றுவதற்கான ஜிஎஸ்டி நிதியிருப்பு ஒன்றிய அரசிடம் இல்லை என்று கூறி நிதிப் பற்றாக்குறையைச் சரிசெய்துகொள்ள மாநிலங்கள் கடன் வாங்கிக்கொள்ள வேண்டும் என்றும், அத்தகைய கடன்களுக்குத் தான் பொறுப்பேற்பதாகவும் ஒன்றிய அரசு கூறியது. சில மாநிலங்கள் இந்த யோசனையை ஏற்றுக்கொண்டாலும் சில மாநிலங்களை அதை நிராகரித்ததோடு ஒன்றிய அரசே கடன் வாங்கித் தருமாறு வேண்டுகோள் விடுத்தன. இதில்,ஒன்றிய அரசுக்கும் அதன் ஆலோசனையை எதிர்க்கும் மாநிலங்களுக்கும் இடையே இணக்கம் ஏற்படும் என்று தோன்றவில்லை.

ஒவ்வொரு மாநிலத்தின் பொருளாதார நிலையும் வெவ்வேறானவை. ஒட்டுமொத்த ஜிஎஸ்டி வருவாயில் மஹாராஷ்டிரம், குஜராத், தமிழ்நாடு, கர்நாடகம் ஆகிய நான்கு மாநிலங்களின் பங்கு மட்டும், ஏனைய 27 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் மொத்தமாகப் பெறும் பங்கைவிட அதிகமானது.

இந்த கணக்குகளின் படி பார்த்தால்,இந்த புதிய வரிவிதிப்பு நடைமுறை ஓரளவு வளர்ச்சி கண்ட மாநிலங்கள்,தங்கள் சொந்த மக்களின் வரிப்பணத்தில் இயங்க முடியாமல் கொடுப்பதற்கும் குறைவாக பெற்றுக்கொண்டு வளர்ச்சிப்பாதையிலிருந்து விலகுவதற்கே வழிவகுக்கிறது.

## நீட்

மருத்துவப்படிப்பில் சேரும் மாணவர்களின் தகுதியை நிர்ணயிப்பதற்கென காரணம் சொல்லப்பட்டு, 2017 ஆம் ஆண்டு முதல்,அகில இந்திய அளவில் இத்தேர்வுகள் மூலம் மருத்துவபடிப்பிற்கு சேர்க்கை நடைபெறுகிறது.

தமிழகம் போன்ற ஏற்கனவே மருத்துவக்கட்டமைப்பில் முன்னேறிய மாநிலங்கள் இதுவரை கடைபிடித்த பன்னிரெண்டாம் வகுப்பு ‘கட்-ஆப்’மதிப்பெண்கள் மூலம் தேர்வு என்னும் முறையை நீக்கியதன் மூலம் கிராமப்புற ஏழை மாணவர்கள் இனி மருத்துவராகவே முடியாத நிலையை ஒன்றியஅரசு ஏற்படுத்தியிருக்கிறது.

நீட்தேர்விலிருந்து விலக்கு கேட்கும் அத்தனை உரிமையும் மாநில அரசுகளுக்கு உண்டு. குறிப்பாக,மிகச்சிறந்த மருத்துவக் கட்டமைப்பும், மாநிலத்திற்கு ஒரு மருத்துவக்கல்லூரியும் மாநில அரசாங்க நிதியில்தான் உருவாக்கியிருக்கிறோம். நாம் கட்டிவைத்த நம் வரிப்பணத்தில் உருவான கல்லூரிகளில் நம் மாணவர்கள் படிக்க முடியாமல் - ஒன்றிய அரசால் நடத்தப்படும் தேர்வுகளை எதிர்கொள்ள முடியா-மல் - தற்கொலை செய்து கொள்வது மாநில அரசுகளின் மீதான ஒன்றிய அரசு போட்டிருக்கும் கடிவாளத்தால்தான்.

இது மட்டுமல்லாம், தேர்வு மையங்களை வெளி மாநிலங்களில் அமைப்பது, மாணவர்களின் ஆடைகள்வரை களைந்து சோதனை செய்வது, வெளிமாநில மாணவர்கள், மருத்துவ சீட்டுகள் அதிகமுள்ள நம் மாநிலத்தில் அதிகம் சேர்ந்து நம் மாநில மாணவர்களின் இடங்களில் படிப்பது என்று எல்லா வகைகளிலும் சமூக நீதிக்கும், மாநில உரிமைகளுக்கும் இடையூறாகவும், தடையாகவுமே உள்ளது.

## ஒரே நாடு ஒரே ரேஷன் கார்

மாநிலங்களில் மாநில அரசுகளால் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் பொதுவிநியோகத் திட்டத்தினை ஒன்றியஅரசு கையகப்படுத்தும் திட்டமே ஒரே நாடு ஒரே ரேஷன் கார்டு திட்டத்தின் நோக்கமாகும்.

குறிப்பாக பொதுவிநியோகத்திட்டத்தில் முன்னோடி மாநிலமான தமிழ்நாடு இந்த திட்டத்தால் மிகப்பெரும் பாதிப்பிற்கு உள்ளாகும்.

நமது உற்பத்தி மற்றும் இறக்குமதிகளை தேவைக்கும் அதிகமாக ஏற்கவேண்டிய சூழலை இந்தத் திட்டம் வலிந்துதிணிப்பதற்கு காரணியாக அமைகிறது.வடமாநிலத் தொழிலாளர்கள் அதிகஅளவில் பணிசெய்யும் தமிழ்நாடு போன்ற மாநிலங்களின் நிதிப்பற்றாக்குறை இதனால் அதிகரிக்கவே செய்யும்.

“இந்தியா என்பது பெருமளவில் வேறுபாடுகளுடைய, பல தனித்தன்மைகள் மிக்க குறிக்கோள்களையும், மிகப்பெரிய அளவில் முற்றிலும் மாறுபட்ட நம்பிக்கைகளையும், பரந்துபட்ட பல்வேறு பழக்கவழக்கங்களையும் கொண்ட உண்மையான கருத்துக்கு விருந்தளிக்கக்கூடிய ஒரு நாடாக உள்ளது” - என்று “The Argumentative Indian” என்ற புத்தகத்தில் நோபல்பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் அமர்த்தியா சென் குறிப்பிடுகிறார்.

“இப்படிப்பட்ட ஒரு கூட்டமைப்பில் உருவாகும் நாட்டில் உண்மையான கூட்டாட்சி முறை நடைமுறையில் இருந்தால்தான் அந்த நாடு உறுதிமிக்கதாக விளங்கும்” என்னும் கருத்தில், அண்ணல் அம்பேத்கர் “The Federation is a Union, because it is indestructible” என்று தன்னுடைய “India - A Union Of States” என்னும் நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தியாவின் இருபெரும் மனிதர்களான அமர்த்தியா சென்னும், அண்ணல் அம்பேத்கரும் மேற்சொன்ன கூட்டாட்சி குறித்தான சிந்தனைகள்,நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒன்றிய பாஜக அரசால் சிதைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒன்றியஅரசு, மாநிலஅரசு என்கிற நிர்வாகப் பிரிவுகளில், ஒன்றிய அரசானது மாநில அரசுகளின் உரிமைகளையும் தனதாக்கிக் கொண்டு, பன்முகத்தன்மை கொண்ட இந்தியாவின் உயர்சிறப்பை அதிகாரக்குவிப்பின் துணைகொண்டு சிதைத்துக்கொண்டிருக்கிறது.

பேரறிஞர் அண்ணா 1960களில் மாநில சுயஆட்சி குறித்து பேசுகையில் “அதிகாரங்களின் மேலதிகாரம் அனைத்தும் டெல்லியில் இருப்பதை மாற்றிடத்தான் மாநில சுயாட்சித் தத்துவம் பிறந்தது. மாநில சுயாட்சி என்பது, தேவையின் அடிப்படையில் எழுந்த அரசியல் கோரிக்கையே தவிர, அரசியல் கட்சிக் கோரிக்கை அல்ல” - என்றார்.

அப்போது மத்தியில் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் கட்சிக்கு எதிராக இப்படி முழங்கினார் பேரறிஞர் அண்ணா. இன்றைக்கு நாம் இன்னும் வீரியமாகப் பேச வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது! ■

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI



# அதிகார நாயகர்களின் ஆபாசக் கும்மாளம்?

# நாறத்தொடங்கியுள்ள ஆஸி நாடாளுமன்றம்

கவல்கணன்

கிரேக்க கடவுள்களில் மிகவும் முக்கியமானவர்களில் ஒருவர் சீயூஸ் (Zeus). வானம் மற்றும் இடி என்பவற்றின் கடவுள் மட்டுமல்ல, கடவுள்களின் அரசர் என்றும் சொல்லப்படுகிறது. சகல வல்லமையும் கொண்ட இவர், பறவைகள் மிருகங்கள் என்று பல வடிவங்களையும் எடுக்க வல்லவர். அப்படி சக்தி வாய்ந்த கடவுள் அந்த சக்தியை வைத்து என்ன செய்தார்? குறைந்தது 26 பெண்களுடன் உறவு கொண்டு தன் இச்சைகளைத் தீர்க்க முயன்றார். இது கிரேக்க இதிகாசம்.

இதற்கும் எமக்கும் என்ன சம்பந்தம் என்று தட்டிக் கழித்து விட்டு செல்ல முடியாது. இந்திய புராணங்களிலும், கிருஷ்ணன் செய்த லீலைகளை இன்றும் நாட்டிய மேடையில் புகழ்ந்து பாடிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

சீயூஸ் அல்லது கிருஷ்ணன் கதைகளைக் கேட்டு வளர்ந்தவர்கள் தாமும் அது போல் லீலைகள் செய்யலாம் என்று நினைப்பதில் என்ன தவறு என்று சிந்திப்பதால்தானோ என்னவோ, தற்போது செய்தி ஊடகங்களையும் பத்திரிகைகளையும் பாலியல் வன்கொடுமைகள் குறித்த செய்திகள் ஆக்கிரமித்துள்ளன.

இருந்தாலும், ஒவ்வொரு கதைக்கும் மூன்று பக்கங்கள் இருக்கும் என்ற கருத்தைக் கொண்டுள்ள நான், பாலியல் வன்கொடுமைகள் அனைத்திற்கும் ஆண் பேரினவாதம் (male chauvinism) தான் காரணம் என்று சொல்வதாக எடுத்துக் கொள்ளக்கூடாது.

அது என்ன மூன்று பக்கங்கள்? எனது கருத்து ஒரு பக்கம், உங்கள் கருத்து இன்னொரு பக்கம், உண்மை மூன்றாவது பக்கம். எந்த உண்மையும் பார்ப்பவர் பார்வையில் நிறம் மாறலாம். பீடிகை வேண்டாம், விடயத்திற்கு வருவோம்.

இந்த மாதம் இரண்டு செய்திகள் ஆஸ்திரேலியாவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் பணியாற்றிய ஒருவர், தான் பணிபுரிந்த இடத்தில் பாலியல் வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்டதாகவும், அது குறித்த முறைப்பாடு சரியான முறையில் கையாளப்படவில்லை என்றும் வந்திருக்கும் செய்தி.

இன்னொன்று, முப்பத்தி மூன்று வருடங்களுக்கு முன் ஒரு பெண் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதாக வரும் செய்திகளின் கதாநாயகன் இந்நாட்டின் சட்டத்துறைக்குப் பொறுப்பானவர் என்பது பகிரங்கப்படுத்தப்பட்ட செய்தி.

இரண்டு செய்திகளுமே நாடாளுமன்றத்துடன் தொடர்பு பட்டவைதான்.

ஆஸ்திரேலிய நாடாளுமன்றம் நிறுவப்பட்ட நாளிலிருந்து அங்கு பெண்கள் பணியாற்றி வந்திருக்கிறார்கள் என்றாலும், நாடாளுமன்றத்திற்குப் பெண்கள் முதல் தடவையாக 1943ஆம் ஆண்டு தேர்தலின் பின்னர்தான், நாடாளுமன்ற உறுப்பினர்களாக செல்ல ஆரம்பித்தார்கள். ஒன்று, இரண்டு என்று ஆரம்பித்த பெண் உறுப்பினர்கள் எண்ணிக்கை, 1980 களுக்குப் பின்னர் படிப்படியாக அதிகரிக்க ஆரம்பித்தது. செனட் சபைக்குத் தெரிவான பெண்கள் தொகை தொடர்ச்சியாக - படிப்படியான - அதிகரிப்பைக் கண்டுள்ளது. கடந்த தேர்தலைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தில் 45 பெண்களும், செனட் சபையில் 37 பெண்களும் கடமையாற்றுகிறார்கள். மொத்த உறுப்பினர்களில் (முறையே 30% மற்றும் 49%) இரு சபைகளிலும் அதிகப்படியான பெண்கள் தற்போது இடம் பெற்றிருக்கிறார்கள்.

ஆண் ஆதிக்கம் பேணப்படுகின்ற அரசியலில், பெண்களின் அரசியல்வகிபாகம் தொடர்ந்து அதிகரிப்பது, மக்களின் மனநிலையைப் பொதுப்படையாகப் பிரதிபலித்தாலும், பெண்களைத் தங்கள் உடமைகளாகப் பார்த்த - பிரித்தானிய சிந்தனையிலிருந்து உதித்த - ஆஸ்திரேலிய நாடாளுமன்ற முறையில் அது பெரிய மாற்றத்தை உருவாக்கியதா என்பது கேள்விதான்.

வரலாற்றில் முன்னர் பதியப்பட்டதா தெரியவில்லை, ஆனால் 2012 ஆம் ஆண்டு பிரதமராக இருந்த Julia Gillard, அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் Tony Abbott அவர்களின் பெண் வெறுப்பு (misogyny) கருத்துகளுக்குப் பதிலளித்து பதினைந்து நிமிடங்கள் ஆற்றிய உரை எமது நாட்டிலுள்ளவர்களை மட்டுமல்ல, உலகின் பல பாகங்களில் வாழும் ஆண்களையும் சுய பரிசோதனைக்கு உட்படுத்தியது. 'நவீன ஆஸ்திரேலியாவில் தவறிழைப்பவர்களின் தன்மை என்ன என்பதை அவர் தெரிந்து கொள்ள விரும்பினால், இந்த நாடாளுமன்றத்தில் அதற்கு ஒரு தீர்மானம் நிறைவேற்றத் தேவையில்லை, அவருக்கு ஒரு முகம் பார்க்கும் கண்ணாடி தேவை' - என்று Tony Abbott ஐ நேரடியாக சாடி, பேசிய பேச்சின் சாரம் இதுதான் - பெண்கள் என்று வரும்போது, பலரும் இரட்டை நாக்குடையவர்கள், ஆண்களுக்கு ஒரு விதி பெண்களுக்கு வேறு விதி. இதே Tony Abbott, அவருடன் பணிபுரிந்த Peta Credlin என்பவருடன் தவறான உறவு வைத்திருந்தார் என்பது பல்வேறு தளங்களில் பேசப்பட்ட விடயம். (இருவரும் இதனை முற்றாக நிராகரித்திருந்தாலும், The Road to Ruin என்ற நூலில் அதற்கான ஆதாரங்களை, Niki Savva என்பவர் விவரித்துள்ளார்.)

அது மட்டுமல்ல, 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம், ஆஸ்திரேலிய செனட்டர் Sarah Hanson-Young, 'உங்களை ஆண்கள் என்று அழைக்க நீங்கள் தகுதியற்றவர்கள்' - என்று செனட் சபை உறுப்பினர்கள் Fraser Anning, Barry O'Sullivan, Cory Bernardi மற்றும் David Leyonhjelm ஆகியோரை விவரித்தார். பல மாதங்களாக பெண்களை இழிவு படுத்தும் கருத்துகளை அவர்கள் பகிர்ந்திருந்தார்கள் என்றாலும், தான் ஒரு பெண்ணாக இருந்தமையால் மட்டுமே செனட்டர் Barry O'Sullivan தன்னைப்பற்றி கேவலமான ஒரு கருத்தை நாடாளுமன்றத்தில் கூறினார் என்பதை செனட்டர் Sarah Hanson-Young எடுத்துக்காட்டினார்.

நாட்டின் சட்ட திட்டங்களை இயற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்டுப்பாடுடன் நடக்க வேண்டும் என்று பொது மக்கள் எதிர்பார்ப்பதில் தவறில்லை. இருந்தாலும், முன்னாள் பிரதமர் Malcolm Turnbull தலைமையில் Liberal – National கூட்டணி அரசு ஆட்சியில் இருந்தபோது, Nationals கட்சியின் எதிர்காலத் தலைவர் என்று வர்ணிக்கப்பட்ட Andrew Broad என்ற துணை அமைச்சர், உத்தியோக பூர்வமாக Hong Kong நகர் சென்றிருந்தபோது, முன்னர் அறிமுகமில்லாத ஒரு பெண்ணுடன் தகாத தொடர்பை ஏற்படுத்தினார் என்ற செய்தி வெளிவந்தது. இதனைக் காவல்துறை விசாரித்து, அதன் முடிவுகளை அறிவிக்க முன்னரே



அவர் தனது பதவியிலிருந்து விலகிக்கொண்டார். இதற்கு சில மாதங்களுக்கு முன்னர்தான், அப்போதைய National கட்சி தலைவர் Barnaby Joyce தன்னுடன் பணியாற்றிய ஒருவரின் குழந்தைக்குத் தந்தையான செய்தி வெளியாகி நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இவற்றைப் பற்றி ஒருசில விவரங்களுடன் தனது சுயசரிதையான 'The Bigger Picture' என்ற நூலில் விவரித்திருக்கும் முன்னாள் பிரதமர் Malcolm Turnbull, ஆஸ்திரேலிய நாடாளுமன்றம் இப்படியான உறவுகளுக்குத் தளம் அமைத்துக் கொடுக்கிறது என்கிறார். தத்தமது சொந்த வீடுகளிலிருந்து தலைநகர் கன்பராவிற்கு வந்து, திங்கள் மதியத்திலிருந்து வியாழன் இரவுவரை தொடர்ச்சியாக ஒரு குறிப்பிட்ட சிலருடன் மிகவும் நெருக்கமாகப் பழகும் ஆண்களும் பெண்களும் பாலியல் ஈர்ப்புக்குள்ளாகுவது தவிர்க்க முடியாதது என்கிறார் அவர். (ஆனால், அப்படி எந்தவொரு சிக்கலிலும் Malcolm Turnbull மாட்டிக்கொள்ளவில்லை!)

இந்த சம்பவங்களைத் தொடர்ந்து, நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற பாலியல் கிசுகிசுப்புகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கிளம்ப ஆரம்பித்தன.

கூட்டணி அரசின் முன்னாள் ஊடக ஆலோசகர் Rachelle Miller என்பவர் அமைச்சர் Alan Tudge உடன் வைத்திருந்த உறவை தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்று அம்பலப்படுத்தியது. சட்டத் துறை அமைச்சர் (Attorney-General) Christian Porter தன்னோடு கொண்டிருந்த உறவு குறித்து, கண்ணீருடன் தன்னிடம் ஒரு இளம் பெண் கூறியதாக செனட்டர் Sarah Hanson-Young கூறியுள்ளார்.

இப்படிப் பல கதைகள் வெளியே வர ஆரம்பித்த போதுதான், ஒரு முக்கிய நாடாளுமன்ற உறுப்பினர் 1988 ஆம் ஆண்டு 16 வயது மாணவியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாக செய்தி அண்மையில் வெளியாகி ஆஸ்திரேலியாவையே பரபரப்புக்கு உள்ளாக்கியது. இந்தச்செய்தியை நாடு முழுவதிலும் கொண்டுசெல்வதற்கு அனைத்து ஊடகங்களும் முண்டியடித்துக்கொண்டு கன்பராவில் காத்திருந்தன. ஓரளவுக்கு விடயம் கனிந்து ஆள் யாரொன்று தெரியவந்தபோதும், உத்தியோகபூர்வ செய்திக்காக நாட்டு மக்களே காத்திருந்தார்கள் என்றுகூடக் கூறலாம்.

அப்போது, அந்த செய்தியுடன் தொடர்புடையவர் தானே என்று ஆஸ்திரேலியா சட்ட மா அதிபர் Christian Porter தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார். ஆனால், அந்தக் குற்றச்சாட்டை நிராகரித்து, அப்படி ஒரு சம்பவமும் நடக்கவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

சம்பவம் இடம்பெற்று சுமார் முப்பது வருடங்களின்



பின்னர் - கடந்த வருடம் பெப்ரவரி மாதம் - New South Wales மாநில காவல்துறையிடம், பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் பெண் பாலியல் வல்லுறவு தொடர்பாக முறைப்பாடு செய்திருந்தார். அவரது முறைப்பாடு குறித்து அவரிடமிருந்து உறுதிமொழி அறிக்கை ஒன்றை காவல்துறை பெறுவதற்கு முன்னதாகவே அந்த முறைப்பாட்டை மீளப் பெற்றது மட்டுமின்றி, கடந்த ஜூன் மாதம் அந்தப் பெண் தனது 49ஆவது வயதில் தற்கொலை செய்து கொண்டார். அத்துடன், காவல்துறையும் அதன் விசாரணைகளைக் கைவிட்டுவிட்டது.

ஆனால், பிரதமர் Scott Morrisonனுக்கும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அந்தப் பெண்ணின் நண்பர்கள் கடிதம் அனுப்பிவைத்த பின்னர், முப்பது வருடங்களுக்கு முன் நடந்ததாக சொல்லப்படும் விவகாரம், மீண்டும் பரபரப்பை ஏற்படுத்தியது. ஊடகங்கள் ஏற்கெனவே செய்திகளை வெளியிட்ட போதிலும், சம்பந்தப்பட்டவர் யார் என்ற அடையாளம் வெளியிடப்படவில்லை. இருந்த போதும், பாலியல் வல்லுறவு குற்றம் சுமத்தப்பட்டவர் தானே என Christian Porter தெரிவித்தார். சிட்னி பல்கலைக்கழகத்தில் 1988ஆம் ஆண்டு நடந்த விவாதப் போட்டியொன்றின் போது, உயர்தர பாடசாலை மாணவியாக இருந்த அந்தப் பெண்ணை, தான் வல்லுறக்குட்படுத்தியதாகக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என அவர் கூறினார். ஆனாலும் அந்தக் குற்றச்சாட்டை முற்றாக அவர் நிராகரித்தார். 33 வருடங்களுக்கு முன்னர், பதின்ம வயதில் விவாதப் போட்டிகளில் பங்குபற்றிய போது அந்தப் பெண் அறிமுகமானவர் என்றும், 1988ஆம் ஆண்டு ஜனவரியின் பின்னர் அவருடன் தனக்குத் தொடர்பிருக்கவில்லை எனவும் அவர் கூறினார்.

உயிர் துறந்த ஒருவருக்கு நியாயம் வேண்டும் என்று கோருபவர்கள் அனைவரும் Christian Porterரின் வாக்கு மூலத்தை ஏற்கத் தயாரில்லை. ஆனால், இந்த சம்பவத்தில் பல கேள்விகளுக்கு விடை இல்லை. அவை சிந்தனைக்காக முன்வைக்கப்படுகின்றனவே அன்றி ஒருவரை நியாயப்படுத்துவதற்காகவோ அல்லது இறந்தவரை இழிவுபடுத்துவதற்காகவோ அல்ல.

1. சம்பவம் நடந்து முப்பது வருடங்கள் கழிந்த பின்னர், முறையீடு செய்வதற்கான காரணம் என்ன? சம்பவம் நடந்த ஒரு சில நாட்களில் அல்லது மாதங்களிலாவது முறையீடு செய்திருந்தால் அதற்கான சாட்சியங்களை காவல்துறை சேகரிக்க முடிந்திருக்கும்.

2. அந்தப் பெண் தற்கொலை செய்து கொண்டதற்கான உண்மையான காரணம் அறியப்பட்டதா?

3. இதற்குப் பின்னணியில் அரசியல் காரணங்கள் இருந்தனவா? இருக்கின்றனவா? பழி சுமத்தப்பட்டவர் ஒரு சாதாரண மனிதராக இருந்திருந்தால் முப்பது வருடங்களுக்குப் பின்னர் இப்படியான சலசலப்புகள் தோன்றுவதற்கு சாத்தியமுள்ளதா?

4. ஊடகங்களில் பகிரப்படும் கருத்து போல, அமைச்சர் பதவி விலக வேண்டுமென்றால், எதிர்காலத்தில் ஒரு அமைச்சரை பதவி விலக வைக்க இப்படி குற்றச்சாட்டை முன்வைத்தாலே போதுமே? எமது சட்ட முறைப்படி, குற்றம் நிரூபிக்கப்படும்வரை ஒருவர் நிரபராதி என்றுதான் கருதப்படுவார். ஆனால், குற்றம் சுமத்தியவரே முறைப்பாட்டை மீளப் பெற்றுவிட்டார். நிலமை அப்படி இருக்கும் போது, ஒரு அமைச்சரை பதவி விலக வேண்டும் என்று கோருவது ஒரு மக்களாட்சி நடக்கும் நாட்டில் தேவையான விடயமா?

5. தன் மேல் எந்தக் குற்றமும் இல்லையென்றால், இது குறித்த ஒரு சுயாதீன விசாரணையை நடத்துமாறு, Christian Porter ஏன் கேட்கக் கூடாது?விசாரணையில் இது தெளிவாகியது என்றால், எந்த வித சந்தேகமும் தேர்தல் காலங்களில் அவரை பங்கப்படுத்தாது என்பது அவருக்குத் தெரியாததா?

இவற்றிற்கான விடைகளை நாம் தேடும் வேளை, தனக்கு எதிராக அவதூறு அறிக்கையை ABC ஊடகவியலாளர் Louise Milligan வெளியிட்டார் என்று Christian Porter மான நஷ்ட வழக்கொன்றை பதிவு செய்துள்ளார். மார்ச் 15 ஆம் நாள் அவர் தாக்கல் செய்த முறைப்பாட்டில், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் அவரது பெயர் இடம் பெறவில்லை என்றும், Louise Milligan வெளியிட்ட செய்தி மூலம் தன்னை உடனடியாக அடையாளம் காணக்கூடியதாக இருந்தது என்றும், அந்தக் கட்டுரை தனக்குத் அவதூறு விளைவிக்கும் நோக்கம் கொண்டது என்றும் அவர் வாதிட்டுள்ளார்.

இந்த விவகாரம் இப்படியிருக்க, ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஏனைய பாலியல் விவகாரங்கள் தொடர்பாக பார்த்தால் -

இந்தப் பாலியல் குற்றங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது மட்டுமின்றி, நாடாளுமன்றத்தில் கடமையாற்றுபவர்கள் மீதும் சுமத்தப்படுகிறது.

நாடாளுமன்ற அமைச்சர் அலுவலகத்தில், அந்த அமைச்சரின் முக்கிய அதிகாரி ஒருவரால், தான் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாக Brittany Higgins என்பவர் முன்வைத்துள்ள குற்றச்சாட்டு பல்வேறு காரணங்களால் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சர் Linda Reynolds அவர்களின் பணி மனையில் 2019ஆம் ஆண்டு நடந்த சம்பவம் பற்றி, முறையிட்டால் தனது வேலை பறிபோகும் என்ற அச்சத்தில், தான் முதலில் மெளனம் காத்ததாக அவர் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் Brittany Higgins தெரிவித்தார்.

பணியிடக் கொண்டாட்டம் ஒன்றில் கலந்து கொண்ட இவர், வீடு திரும்ப முடிவெடுத்தபோது, நாடாளுமன்றத்தில் பணிபுரியும் மூத்த அதிகாரி ஒருவர் தனது வாகனத்தில் வீட்டிற்கு அழைத்துச் செல்வதாகக் கூறியதாகவும், ஆனால் வாகனத்தை நாடாளுமன்றத்திற்குக் கொண்டு சென்றபோது தான் போதையில் இருந்ததாகவும், பாதுகாப்பு அமைச்சர் Linda Reynolds பணிமனையில் தான் உறங்கிவிட்டதாகவும் கூறிய அவர், கண் விழித்துப் பார்த்தால் அந்த அதிகாரி பாலியல் வன்புணர்வு செய்வதை உணர்ந்து தான் அழத் தொடங்கிவிட்டதாகவும், 'உடனே நிறுத்துங்கள்' என்று அவரிடம் கூறியதாகவும் தனது முறைப்பாட்டில் கூறியுள்ளார்.

அந்த அதிகாரி, அமைச்சரின் பணிமனையிலிருந்து தற்போது பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

ஆனால், நடந்த சம்பவம் குறித்துப் பகிரங்கமாக அறிவித்தபோது, அமைச்சர் Linda Reynolds நடந்த விதம் அவரது மனவுழைச்சலுக்கு எரிகிற நெருப்பில் எண்ணையூற்றியது போல் அமைந்து விட்டது என்று அங்கலாய்க்கிறார் Brittany Higgins.

தான் செய்ய விரும்பிய தொழில் தனக்குக் கிடைத்த சில மாதங்களில் இந்த சம்பவம் நடந்ததால், தனது தொழிலைப் பாதுகாத்துக் கொள்வதா அல்லது காவல்துறையிடம் முறைப்பாடு செய்வதா என்ற மனவுழைச்சலில் ஒன்றைத் தெரிவு செய்ய வேண்டிய நிலைக்குத் தான் தள்ளப்பட்டதாகவும் Brittany Higgins கூறியுள்ளார்.

ஆஸ்திரேலிய அரசியலில் பெண்கள் பலர் மிரட்டல்கள், தொந்தரவுகள், பாலியல் கொடுமைகள், தவறான நடத்தைகள் முதலானவற்றை எதிர்கொண்டமை தொடர்பாக பல சர்ச்சைகளை அறிந்து கொண்ட பின்னர், இது ஒரு தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை என தான் உணர்ந்ததாகவும் Brittany Higgins கூறியுள்ளார்.

இந்த விடயத்தைக் கையாண்ட விதத்தை அரசு முதலில் நியாயப்படுத்தியிருந்தாலும், Brittany Higgins ஒரு பொய்யர் (lying cow) என்று கூறிய அமைச்சர் Linda Reynolds அதற்காக மன்னிப்புக் கோரியது மட்டுமின்றி, இந்த சம்பவம் தனக்கு மனவுழைச்சலை ஏற்படுத்தியுள்ளது என்று சில வாரங்கள் ஓய்வெடுக்க சென்றுள்ளார். அரசு கையாண்ட விதம் குறித்து தான் மன்னிப்பு கோருவதாகப் பிரதமர் Scott Morrison கடந்த வாரம் தெரிவித்தார். 'இது நடந்திருக்கக்கூடாது. நான் மன்னிப்பு கோருகிறேன்' என்று கூறிய அவர், குற்றச்சாட்டு தொடர்பாக விசாரணைக்கு உத்தரவிடப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஆனால், இப்படியான சம்பவங்கள் நாடாளுமன்றத்தில் மட்டுமா நடக்கிறது?

ஆஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணையம் இரண்டு ஆண்டுகளுக்கு முன் எடுத்த கணக்கெடுப்பின் படி, 15 வயதிற்கு மேற்பட்ட ஆஸ்திரேலியர்களில் 72 சதவீதமானோர் தங்கள் வாழ்நாளில் பாலியல் துன்புறுத்தல்களை அனுபவித்திருக்கிறார்கள் என்று கூறுகிறது. அதற்கு முந்தைய 12 மாதங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக ஆய்வில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போது, 23% பெண்கள் மற்றும் 16% ஆண்கள் பணியில் துன்புறுத்தப்பட்டதாகக் கூறியிருந்தனர். பாலியல் துன்புறுத்தல்கள் அதிகரித்ததால் இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளதா அல்லது அது குறித்து புகாரளிப்பவர்கள் அதிகரித்துள்ளார்களா என்பது ஒரு கேள்வி. இருந்தாலும் பாதிக்கப்பட்டவர்களில் வெறும் 17 சதவீதமானவர்கள் மட்டுமே அவை குறித்து புகார் அளித்திருக்கிறார்கள் என்று அந்த அறிக்கை மேலும் சொல்கிறது.

இது தவிர, போர் சூழலில் பாலியல் வன்முறையில் ஈடுபடுபவர்கள் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. தொண்ணூறுகளில் Yugoslavia நாடு பிரிந்ததைத் தொடர்ந்து நடைபெற்ற போரில் நிகழ்ந்த பாலியல் வன்முறைகள்தான் முதன்முறையாக சட்டத்தின் முன் விசாரிக்கப்பட்டவை. பெண்கள் மட்டுமல்ல, ஆண்களும் இப்படியான போர்ச் சூழல் பாலியல் வன்முறைக்கு ஆளாகிறார்கள் என்று Human Rights Watch அமைப்பு சொல்கிறது. லிபியா, சிரியா போன்ற நாடுகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஆண்களும் பாலியல் வன்முறை கலந்த சித்திரவதைக்கு உட்படுத்தப் படுகிறார்கள் என்று அறிக்கைகள் சொல்கின்றன.

போர்ச் சுழலில், பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட பெண்கள் தங்களைப் பாதுகாக்கும் முயற்சியில்தான் முதலில் ஈடுபடுகிறார்கள் என்றும், ஒரு பாதுகாப்பான இடத்தை அவர்கள் அடைந்த பின்னர்தான், தாம் அனுபவித்ததன் தாக்கங்களை உணர்கிறார்கள் என்று அந்த அறிக்கை சொல்கிறது. ஆனால், இயல்பு வாழ்க்கை வாழும் நம் சமூகத்தின் பார்வை மாறிவிடும் என்ற அச்சத்தினாலோ அல்லது ஊதியம் தரும் தொழிலுக்குப் பங்கம் வந்துவிடும் என்ற பயத்தினாலோ முறையீடு செய்யாமல் விடப்படுகிறது.

இது தவிர, பாலியல் தொல்லை அல்லது வன்முறை என்ற குற்றச்சாட்டு வந்தாலே ஒரு பெண் சொல்வதுதான் உண்மை என்று உடனடியாக பலரும் முடிவுக்கு வருவதும் உண்டு. அதனால் தான், இப்படியான முறைப்பாடுகள் தீர விசாரிக்கப்பட வேண்டும். இது குறித்த குற்றச்சாட்டுகளை முன்வைப்பவர்களையோ, குற்றம் சுமத்தப்பட்டவரையோ குற்றவாளிக் கூண்டில் ஏற்ற முன்னரே ஊடகங்கள் - குறிப்பாக சமூக ஊடகங்கள் - தீர்ப்பு வழங்கும் முறையை நாம் மாற்ற வேண்டும்.

இதற்காகப் புதிய சட்டங்கள் இயற்றப்படலாம். ஆனால், ஒவ்வொரு ஆணும், ஒவ்வொரு பெண்ணும் மற்றவர் விருப்பு வெறுப்புகளை உணர்ந்து அவற்றுக்கு மதிப்பளித்து நடந்து கொண்டால் குற்றச் சாட்டுகள் மட்டுமல்ல குற்றச்செயல்களும் குறையும். இந்தக் கருத்தை நான் முன்வைக்கும் போது, 'அவர் விரும்பித்தான் நான் அணுகினேன், ஆனால் இப்போது தவறு எனது என்கிறார்' - என்று சிலர் புலம்பலாம். அதனை சீயூஸ் மட்டுமல்ல கிருஷ்ணன் - இருவருமே எதிர் கொண்டிருக்கிறார்கள். ஒருவர் விரும்பி உங்களை அணுகச் சொல்லி விட்டு, பாதி வழியில் அவர் மனம் மாறிவிட்டார் என்றால் அந்த மன மாற்றத்திற்கு மதிப்பளிக்க வேண்டும்.

இதனை எந்த நாடாளுமன்றம் இயற்றும் சட்டத்தாலும் தீர்த்து விட முடியாது. ஒவ்வொரு ஆணும் ஒவ்வொரு பெண்ணும் தனக்குத்தானே போட்டுக் கொள்ளும் சட்டத்தால் மட்டுமே தீர்க்க முடியும்.



# கொரோனா சூடிய கனடா வாழ்க்கை
# தமிழர்கள் இழந்ததும் அடைந்ததும்!



கனடாவிலிருந்து மூர்த்தி

**2021** வருடத்தின் கால்வாசி பறந்துவிட்டது. கனடிய அரசாங்கம் தற்போது பொதுமக்களுக்கு கொரோனா தடுப்பூசி போடுவதில் முழுமூச்சாக ஈடுபட்டிருக்கிறது. பொதுமக்களுக்கு மூன்று படிநிலைகளில் தடுப்பூசியி வழங்கும் திட்டத்தை அது தற்போது மேற்கொள்கிறது. இந்த இலையுதிர்காலம் ஆரம்பிப்பதற்குள் முதலாம் படிநிலையில் உள்ளவர்களுக்கு தடுப்பூசி தரப்பட்டுவிடும். இந்த முதலாம் படிநிலையில் 70 வயதிற்கும் அதற்கு மேற்பட்டவர்களும் அடங்குகிறார்கள். அவர்களைத்தவிர கோவிட்-19 அதிக பாதிப்பை கொண்டிருப்பவர்களும், மற்றவர்களுக்கு வைரஸை காவிச் செல்லக்கூடிய நிலையில் இருப்பவர்களும், மருத்துவ சேவையாளர்களும் இந்த படிநிலையில் அடங்குகிறார்கள்.

இதில் நாம் கவனிக்கவேண்டிய ஒன்று என்னவென்றால், ஒரு குறிப்பிட்ட தொகை தமிழர்களுக்கு ஏற்கனவே கோவிட் தொற்று ஏற்பட்டு எந்தவித தடுப்பூசியும் இன்றி அவர்கள் குணமாகியும் விட்டார்கள் என்பதுதான். கோவிட் தாக்கியவர்களில் பெரும்பான்மையோர் தொற்று ஏற்பட்டதை - ஏதோ குற்றச்செயல் நடந்ததுபோல - இரகசியமாக வைத்திருந்திருக்கிறார்கள். இந்தச்செய்தி தற்போதுதான் மெது மெதுவாக வெளியே பரவலாகத் தெரியவருகிறது. இன்னும் சிலர், தமக்கு தொற்று ஏற்பட்டது தெரியாமலோ - அல்லது தெரிந்தும் அஜாக்கிரதையாக நடந்து கொண்டதாலோ - இன்னும் பலருக்கு நோயைப் பரப்பியிருந்தார்கள் என்பதைக் குறித்தும் தற்போது பலரும் பேச ஆரம்பிக்கிறார்கள்.

இந்த கொரோனா நெருக்கடி காலத்தில் கனடிய அரசாங்கம் பல்வேறு நிவாரணத் திட்டங்களை கனடியர்களுக்குத் தாராளமாக அறிவித்திருந்தது. கொரோனா காரணமாக வேலை இழந்தவர்களுக்கும், வேலைக்குச் செல்ல முடியாதவர்களுக்கும் அது இன்னமும் உதவி வருகிறது. பல்வேறு உதவித் தொகைகள், வட்டியில்லாக் கடன்கள், நிவாரணக் கொடுப்பனவுகள் போன்ற பல்வேறு உதவித் திட்டங்களால் பெரும்பான்மையான தமிழ்க் கனடியர்களும் நேர்மையாகப் பயன் பெற்றிருக்கிறார்கள். அது ஒருபுறமிருக்க, நம் சமூகத்தைச் சேர்ந்த இன்னும் சிலர்,அதே திட்டங்களைத் தவறாக பயன்படுத்திப் பலன் (பணம்) பெற்றமையும் தெரியவந்து கொண்டிருக்கிறது. ஏய்ப்புக்கள், மோசடிகள் என நம்மவர் செய்த பல்வேறு குழறுபடிகள் பற்றிய செய்திகளும் தற்போது வெளியாகிக்கொண்டிருக்கின்றன.

கொரோனா ஆரம்ப கட்டத்திலிருந்தபோது, எந்தவித கட்டுப்பாடுகளுமின்றி உதவிகளை வழங்கிய கனடிய அரசாங்கம்,தற்போது ஏராளமான கணக்காளர்களைப் பணியில் அமர்த்தி, கொரோனா நிவாரண உதவி பெற்ற ஒவ்வொருவரினது விபரங்களையும் சாவகாசமாக சரிபார்த்து வருகிறது. குறிப்பாக, வரி செலுத்துதல் ஆவணங்கள், நிதி நிலை ஆவணங்கள் என பல்வேறு ஆவணங்களையும் சோதனை செய்தும் வருகிறது. இதன்மூலம் ஏமாற்று, குற்றச்செயல்கள் புரிந்ததாக அகப்பட்டு வருபவர்கள் பட்டியலில் நம் தமிழர்களும் இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

உண்மையில் கொரோனா பரவலுக்குப் பிற்பாடு எம்மவர் வாழ்க்கையானது அதற்கு முன்பிருந்ததுபோல குதூகலமாக இல்லை. சென்ற ஆண்டு முழுவதுமே நமது கலாச்சாரக்கூறுகளை கொண்டிருக்கும் பண்டிகைகள் பலவும் சோபை இழந்து போயிருந்தன. இன்றுவரை அதே நிலைமைதான் தொடர்கிறது. தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் ஒன்ராறியோ, கியூபெக் மாகாணங்களில் கோலாகலமாக நடக்கும் கோயில் திருவிழாக்கள், திறந்த வெளிக் கலைநிகழ்ச்சிகள், உள்ளரங்கு இசை நிகழ்ச்சிகள் என பலவும் இன்னமும் உறைநிலையில்தான்இருக்கின்றன. மக்கள் கூடுவதற்கான கட்டுப்பாடுகள் அடுத்த சில ஆண்டுகளும் தொடரும் என்ற நிலை இருப்பதால் திருமணக் கொண்டாட்டங்கள், பூப்புனித நீர் கொண்டாட்டங்கள், பிறந்தநாள் விழாக்கள் உட்பட பல குடும்ப ஒன்றுகூடல்களும் தற்போது இல்லை. ஆடம்பரமற்ற வாழ்கைக்கு சமூகம் மெதுவாக பழக்கப்பட்டு வருகிறது.

மண்டபங்களில் கூடுபவர்களின் எண்ணிக்கைமீது கடுமையான கட்டுப்பாடுகள் இன்னும் தொடர்கின்றன. இதனால் எழுந்த ஒரு சுவாரஸ்ய சம்பவம் ஒன்றினை சொல்கிறேன்:

ஒரு விருந்துபசார மண்டபத்திற்குள் 50 பேர் வரைதான் போகலாம் என்றிருந்த காலகட்டத்தில், திருமண-விழா ஒன்று இங்குள்ளதொரு விருந்துபசார மண்டபத்தில் நடைபெற்றது. மண்டபக்காரர்களும் 50 பேரை உள்ளே அனுமதித்து கதவைப் பூட்டிவிட்டார்கள். பிறகுதான் தெரிந்தது வெளியே மாட்டிக் கொண்டவர்களில் மண-மகளும் அவளது குடும்பத்தினரும் அடக்கம் என்று!

கொரோனாவிற்கு முன்னர் ஒவ்வொரு வாரமும் பல இடங்களில் நாடகங்கள், பரதநாட்டிய அரங்கேற்றங்கள் மற்றும் கலைநிகழ்ச்சிகள் என பல ஒன்றுகூடல்கள் மக்களை சமூக அளவில் ஒன்றுகூட்டி அலுத்துப்போகும்வரை மகிழ வைத்தவாறிருந்தன. அவையும் கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் பெரிதாகக் கதை பேசவில்லை. கேளிக்கை மண்டபங்கள் தற்போது வெறிச்சோடிக் கிடக்கின்றன. ஆயி-னும் அவை மூடப்படாமல் இருப்பதற்கு கனடா அரசாங்கம் அளித்துவரும் நிவாரணத் தொகை ஒரு காரணம். மற்றது நிலைமை மாறும் என்ற பெரும் நம்பிக்கை.

அரசாங்கம் அமுல்படுத்தியிருக்கும் வீடடங்கு உத்தரவுகளையும் மீறி சந்திப்புக்கள் தொடர்வதும், கொண்டாட்டங்கள் நடப்பதும், சிறு அளவிலான ஒன்றுகூடல்களும் நம்மவர்கள் மத்தியில் நடக்காமல் இல்லை. பல இடங்களில் ஆர்வக்கோளாறு காரணமாக விருந்தினர்களை அழைத்து தத்தம் வீட்டுக்குள் குழுமிக் கொண்டாடுவதும் நடக்கிறது. ஆனால், பக்கத்து வீட்டுக்காரர்கள் "போட்டுக் கொடுத்த"காரணத்தினால் சில வீடுகளுக்கு அழையா விருந்தாளியாகப் பொலீஸார் வந்ததும், அதன்மூலம் மொய்ப் பணத்திற்கும் மேலாக அபராதத் தொகைகள் கட்டப்பட்ட பரிதாபங்களும் நிகழ்ந்திருக்கின்றன.

கொரோனா கால கட்டுப்பாடுகள், சமூக அளவில் பெரும் மன அழுத்தத்தை விரும்பியோ விரும்பாமலோ தந்து கொண்டிருக்கிறது. அவற்றைக் குறித்து பேசி தமிழ் மக்களின் மனஅழுத்தங்களைக் குறைக்க இங்குள்ள தமிழ் ஊடகங்கள் அதிகம் முனைவதில்லை. (இங்குள்ள தமிழ் ஊடகவியலாளர்களுக்கே பல வகையிலும் மனஅழுத்தங்கள் அதிகம் என்பது வேறு கதை) இன்னும் சொல்லப்போனால் பொதுவாகவே மன அழுத்தங்கள் குறித்து வெளிப்படையாக உரையாடும் வழக்கம் நமது மக்களிடம் அதிகம் இல்லை என்றே சொல்ல வேண்டும். இதனால்தானோ என்னவோ வீட்டில் குடும்பத் தலைவருக்கு ஏற்படும் மன அழுத்தம் பின்னர் மற்றவர்களுக்கும் பரவி,அதன் மூலம் கடந்த ஆண்டு குடும்ப வன்முறைகள், குடும்ப வன்முறைச் சம்பவங்கள், குற்றச் செயல்கள் பலவும் சுமார் இரண்டு மடங்கிற்கும் மேல் அதிகரித்திருப்பதை எனக்குத் தெரிந்த குடும்ப ஆலோசகர் ஒருவர் விளக்கிக் கூறினார்.

கொரோனாவிற்குப் பயந்து வீட்டினுள் இருப்பதன் காரணமாக, கணவன் மீது மனைவி உளவு பார்ப்பதும், மனைவிமீது கணவன் உளவு பார்ப்பதுமான செயல்கள்கூட தற்போது அதிகரிக் கொண்டிருக்கின்றன என்றும் சொன்னார் அவர். "ஒன்றாயிருந்த தம்பதியரிடம்கூட பரஸ்பர சந்தேகங்கள் ஏற்பட்டு, குடும்பங்கள் பிரியும் நிலைவரைக்கும் நமது சமூகம் போய்க் கொண்டிருக்கிறது" - என்ற அவரது அவதானம் நாம் நினைத்தும் பாராமல் கொரோனாவால் ஏற்பட்ட இன்னொரு துயரம்.

என்னதான் விமர்சனங்கள் இருந்தாலும், நமது சமூகத்தில் மன அழுத்தத்தையும், மன இறுக்கங்களையும் தவிர்ப்பதில் தமிழகத்துச் சினிமா பொதுவாகவே பெரும் பங்காற்றி வந்திருக்கிறது. ஆனால், கடந்த ஆண்டு முதல் தமிழகத் திரைப்படங்களின் வெளியீட்டு எண்ணிக்கை மிகக் குறைந்த அளவிலிருக்கிறது. போதாக்குறைக்கு கனடாவில் தமிழ்ப் படங்களைத் திரையிட்டு வந்த திரையரங்குகள் இன்னமும் பூட்டப்பட்ட நிலையில்தான் இருக்கின்றன. சமூகத்தின் பெரும்பான்மையினரை ஆறுதல்படுத்திய தமிழ் சினிமாவும் நம்மவரைக் கைவிட்டுவிட்டது.

இந்த வெற்றிடத்திற்கு ஈடுகொடுக்கும்வகையில் இருக்க வேண்டிய தமிழகத் தொலைக்காட்சிகளிலும் பெரும் ஆரவாரங்கள் இல்லை. 'சுப்பர் சிங்கர்', 'பிக் பொஸ்' என்பனகூட பெரிதாக பேசப்பட்டதாகத் தெரியவில்லை. முன்பெல்லாம் சினிமா நடிகர்கள், சுப்பர் சிங்கர் பாடகர்கள் என பல்வேறு கலைஞர்கள் இங்கு வந்து இறங்குவதும், நீள நீளமான கார்களில் அவர்களை அழைத்து வந்து - அக்கலைஞர்கள் கனவிலும் நினைத்திராத - வரவேற்புக்கள் தருவது கனடியத் தமிழர்களின் பெரு வழக்கமாக இருந்தது. ஆனால்,கடந்த ஆண்டு அவர்கள் "தரிசனமும்"யாருக்கும் கிடைக்கவில்லை. இந்த ஆண்டு கோடைக்காலமும் அ-தேபோல வரண்டு காணப்படப்போகிறது என்ற கவலையும் பலரிடம் ஏற்பட்டுவிட்டது.

அப்போ என்னதான் பொழுதுபோக்கு எனக் கேட்கிறீர்களா?

கொரோனா காரணமாக ஒ.ரி.ரி. ஊடாக படம் பார்க்கும் வழக்கம், அன்ட்ரோயிட் ரிவி பொக்ஸ்களை உபயோகிக்கும் வழக்கம், யூட்யூப் சனல்கள் பார்க்கும் வழக்கம் என்பன பலவும் பல மடங்கு அதிகரித்திருக்கிறது. இணையத்தில் வலம்வரும் குட்டிக்குட்டியான நகைச்சுவைத் வீடியோத் துணுக்குகள் பிரபலமாகி வருகின்றன. ரிக்ரொக், வாட்ஸ்அப்பிலும் அத்துணுக்குகள் பரவி கனடாத்தமிழர்களின் மன அழுத்ததை போக்கிவருகின்றன என்பதை அடித்துச் சொல்லலாம். உதாரணத்திற்கு ஆஸ்திரேலியாவிலிருந்து இரண்டு இளம் பெண்கள் இன்ஸ்டாவில் நடித்து சிரிக்க வைத்துக் கவர்கிறார்கள், ரொறொன்ரோ விலிருந்து பிரணவி ரவி அச்சுதனின் "கமலா அன்ரி" அலப்பறைகள் விடாமல் தொடர்கின்றன. இலங்கையிலிருந்து சந்துருவும் அவரது மனைவி மேனகாவும் கலக்குகிறார்கள்.

இவற்றையெல்லாம் படித்துவிட்டு, "கனடாத் தமிழர்கள் வாழ்க்கை தற்போது சோகமயமாகத்தான் இருக்கிறதா?" என்ற கேள்வியை மட்டும் கேட்டுவிடாதீர்கள். கொரோனா என்ன, நான்காவது உலக யுத்தமே வந்தாலும் நம்மவர்கள் எப்படியும் தம்மை மகிழ்ச்சியாகத்தான் வைத்திருப்பார்கள்.

# H.N. PAWN BROKER
# எச்.என். அடகு கடை

- குறைந்த வட்டி வீதம்
- நம்பிக்கை மிகுந்த ஒரே இடம்
- சேவைக்கட்டணம் இல்லை
- சனிக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

தங்கப்பவுணுக்கு அதிகூடிய முற்பணம் வழங்கப்படும்

வட்டி 3%

Hub Arcade, 28/15-23 Langhorne St, Dandenong VIC 3175
Tel/Fax : 03 8712 1406, Ruban : 0423 094 478

நம்பிக்கையில் வாடிக்கையாளர்களின்
மனதில் இடம் பிடித்த -
10 வருடகால அனுபவமுள்ள...

# PERPETUA TRADE

## Money Transfer Worldwide

We Guarantee the best rate for
SRI LANKA, INDIA, CANADA, UK & EUROPE

- SAME DAY BANK TRANSFER & HOME DELIVERY
- RESPONSIBLE CUSTOMER SERVICE
- CONVINIENT WORLDWIDE LOCATIONS
- EASY, QUICK INTERNET MONEY TRANSFER

COMMERCIAL BANK | BOC | PEOPLE'S BANK | SEYLAN BANK PLC | HNB | SampathBank | NSB National Savings Bank | cash Xpress

Send Money to any Bank In Sri Lanka

Hub Arcade, 28/15 -23 Langhorne St. Dandenong VIC 3175
Tel/Fax: 03 8712 1406 Mob: 0423 094 478 - Email: pmoneytransfer@ymail.com



# நவ்று அகதிகள் மீது நடக்கும் கொள்ளை!



## வெளிவராத சம்பவங்களின் பின்னணியில்...!

## காரால் அடிக்கப்பட்டதால் ஆஸ்திரேலியா கொண்டுவரப்பட்டவரின் செவ்வி

இலங்கை யுத்தம் - தலிபான்களின் போர் ஆகியவை உச்சம் பெற்ற காலகட்டத்தில் இலங்கை, பாகிஸ்தான்,ஈரான் மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் இருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் ஆஸ்திரேலியாவில் தஞ்சமடைய படையெடுத்துவந்தனர். படகுகள் வழியாக இவ்வாறு பெருந்தொகையாக வந்தவர்களினால், ஆஸ்திரேலியாவுக்கு அரசியல் ரீதியிலும் பல நெருக்கடிகள் தலையெடுத்திருந்தன.

இந்தக்காலப்பகுதியில் அகதிகளுக்கு நேசக்கரம் நீட்டினார் அப்போதைய பிரதமர் ஜூலியட் கிளாட். ஆனால்,அதுவே கடைசியில் அவருக்கு ஆப்பாகவும் மாறியது. வகைதொகையின்றி வந்து குவிந்த அகதிகளை கட்டுப்படுத்தவல்ல உரிய நிர்வாகத்தை நடத்தவில்லை என்ற குற்றம் உட்பட பல்வேறு காரணங்களினால் கட்சி தலைமைத்துவமும் அவரிடமிருந்து பறிபோனது. அவரைத்தொடர்ந்து புதிய பிரதமர் பதவியேற்றார்.

இவ்வாறு பதவியேற்ற லேபர் கட்சியின் புதிய பிரதமரான கெவின் ரட் அகதிகளுக்கு கடிவாளம் போடும் விதத்தில் "படகு வழி வரும் அகதிகளை கடல் கடந்த தீவொன்றில் தடுப்பு முகாம்கள் அமைத்து அங்கு வைத்தே அவர்களை விசாரிப்போம்" - என்ற சட்டத்தை கையில் எடுத்தார். இந்தக்கால கட்டத்தில்,லேபர் கட்சியின் ஆட்சிக்கு முடிவுகட்டிவிட்டு, லிபரல் கட்சியிடம் ஆட்சி அதிகாரத்தை ஆஸி. மக்கள் கையளித்தனர். ஆனால் அகதிகள் விவகாரத்தில் லிபரல் கட்சி லேபரைவிட கடும்போக்கை கடைபிடித்தது. அதுமட்டுமல்ல,சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா வருபவர்கள் கடல் கடந்த பிரதேசத்தில் வைத்துதான் விசாரிக்கப்படுவார்கள், நாட்டுக்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்ற திட்டத்தையும் வலுப்படுத்தி, அகதிகளை கடலிலேயே வைத்து வேட்டையாடி, திருப்பியும் அனுப்பியது.

அகதிகள் விவகாரத்தில் கடைபிடித்த இந்த இறுக்கமானது இன்று பலரின் வாழ்வுக்கு பேரழிவாகியுள்ளது. சிலர் உயிரிழந்துள்ளனர். மேலும் சிலர் மெல்லெனச் சாகின்றனர்.

உலகில் நாளாந்தம் பல மாற்றங்கள் நிகழ்கின்றன. ஆனாலும் ஆஸ்திரேலிய அகதிகள் விடயம்மட்டும் மாறுவதாக எந்த சகுனமும் தெரியவில்லை. புதிய வாழ்வு தேடி சென்றவர்கள், வாழ வழியின்றி, தீவுகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். பிறந்த மண்ணிலும் கொடுமை, புகுந்த மண்ணிலும் கொடுமை என்ற அவலநிலை அவர்களை சூழ்ந்துகிடக்கிறது.

நவுறுத்தீவு தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டு, அகதிக் கோரிக்கை பரீசிலனை செய்யப்பட்டு, அகதிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர்,அங்கு சமூகத்துடன் சிலர் இணைக்கப்பட்டனர். அந்தத் தீவின் வாழ்வு தொடர்பாகத்தான் இந்தத்தடவை "அகதிகளின் வலிசுமந்த வலி" - என்ற இந்தப்பத்தி பேசவுள்ளது.

அந்தத்தீவில் சமூகத்துடன் இணைத்துக்கொள்ளப்பட்டவர்களின் செலவீனங்களுக்காக ஆஸ்திரேலிய அரசு 400 டொலர்களை மாதாந்தம் வழங்கிவருகிறது. அத்துடன்,அங்கு வேலை செய்வதற்கான அனுமதியையும் நவுறு அரசு வழங்கியுள்ளது. இதற்கமைய, அந்நாட்டில் மேசன், மெக்கானிக், பாதுகாப்பு உத்தியோத்தர் மற்றும் நாட் கூலி வேலைகள் போன்றவற்றை அகதிகள் செய்து வருகின்றனர். இந்த வேலைக்காக ஒரு மணி நேரத்துக்கும் 3 முதல் ஐந்து டொலர்கள் ஊதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறான வேலைகள் செய்து,ஊரில் உள்ள குடும்பங்களுக்கு சொற்ப உதவிப் பணத்தை அனுப்பிவரும் அகதிகள் ஒரு பக்கம் தங்களின் நிரந்தர வதிவிடத்திற்காகப் போராடிக்கொண்டிருக்க, மறுபுறத்தில் உள்ளூர்வாசிகள் ஒரு சிலரின் வழிப்பறி கொள்ளைகளுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர்.

இவ்வாறான வழிப்பறி கொள்ளைக்கு இடையில் சிக்கி ஒருவர் உயிரிழந்தும் பலர் காயமடைந்தும் உள்ளனர். எனினும்,இப்பிரச்சினைக்கு இன்னும் தீர்வு கிடைக்கவில்லை.

இவ்வாறு வழிப்பறிக் கொள்ளை கும்பலினால் பாதிக்கப்பட்ட ஒருவரின் வலி சுமந்த வாழ்வையே இம்முறை "எதிரொலி"தாங்கிவருகின்றது.

குறித்த நபர், ஒருநாள் வேலைக்குசென்றுவிட்டு வீடு திரும்பும் வழியில், இனந்தெரியாத குழுவினர் அவர்மீது காரை ஏற்றி அடித்துவிட்டு உடைமைகளை சூறையாடிச்சென்றனர். இச்சம்பவத்தில் அவருக்கு முள்ளந்தண்டை தவிர ஏனைய எலும்புகள் முறிவடைந்துள்ளன என கூறப்படுகிறது.

ஏற்கனவே அறிந்த பெயர் என்பதால் சதீஸ் என்ற அழைப்போடு ஆரம்பமான உரையாடல்,பேச விளைந்த விடயத்தை விளக்கிய பிறகு,"உங்களால் கதைக்க முடியுமா" - என வினவினோம்.

"என்னால் அதிக நேரம் பேசமுடியாது. எனது தொண்டைப்பகுதி ஊடாகவே முன்னர் உணவு உள்ளே செலுத்தப்பட்டது. அந்த வலி தொடர்கின்றது" - என கூறியவாறு எமது வினாக்களுக்கு விடையளித்தார்.

"எனது சொந்த இடம் மன்னார் மாவட்டத்தில் உள்ளது. ஊர் பெயரை வெளிப்படுத்த வேண்டாம். எனது குடும்பத்தாருக்கு என்நிலை தெரியாது. பெற்றோர்,மூன்று தங்கைமார் உட்பட அனைவரும் ஊரில்தான் இருக்கின்றனர். இறுதிப்போர்வரை நாம் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தோம். இறுதிச்சமரின்போது எனக்கு வயிறு மற்றும் இதர பகுதிகளில் காயங்கள் ஏற்பட்டன. காயங்களுக்கு மத்தியிலேயே இராணுவத்தினரிடம் சரணடைந்தோம்.

"புனர்வாழ்வு என்ற பெயரில் 3 ஆண்டுகள் தடுப்பு முகாமில்போட்டு வதைத்தார்கள். விடுவித்த பிறகு,ஊரில் ஒரு வருடம் இருந்தேன். இராணுவப்புலனாய்வுப் பிரிவின் கண்காணிப்பும், அழைப்புகளும் பெரும் அச்சத்தை உருவாக்கியது. இதனால்,தமிழ் நாட்டுக்கு தப்பிச்சென்றேன். எத்தனை நாட்கள்தான் அச்சத்துக்கு மத்தியில் வாழ்வது? இதனால்தான் தமிழகம் செல்லும் முடிவை எடுத்தேன். அங்கிருந்துதான் ஆஸ்திரேலியா நோக்கிப் பயணமானேன்.

"2014 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29 ஆம் திகதி,எமது படகு ஆஸ்திரேலியாவின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. எங்களைக் கைதுசெய்த கடற்படையினர் ஒருமாதமாக கப்பலிலேயே தடுத்துவைத்திருந்தனர். இலங்கை - இந்திய அரசுகளிடம் எம்மை கையளிக்க முயற்சி எடுக்கப்பட்டது. இரு நாடுகளும் எம்மை ஏற்கவில்லை. இந்நிலையில்,ஆஸ்திரேலியாவின் மனித உரிமை அமைப்புகள், நீதிமன்றத்தை நாடிய பிறகு,இரு வாரங்கள் கடல் வழிப்பயணத்தின் ஊடாக கொக்கோஸ் தீவில் கொண்டுபோய் இறக்கப்பட்டோம். அதேநாள்,மேற்கு ஆஸ்திரேலியாவில் உள்ள கேர்ட்டின் அகதிகள் முகாமுக்கு மாற்றப்பட்டோம். அங்கு ஐந்து நாட்கள் வைத்திருந்த பின்னர்,156 பேரையும் நவ்றுதீவு தடுப்பு முகாம்களுக்கு மாற்றினர்.

"நவ்று ஒரு பாலைவனத்தீவு. அதனைப் பாலைவனத் தீவு என்று கூறிய பின்னர் அது குறித்து அதிகம் சொல்லத் தேவையில்லை என எண்ணுகிறேன். ஒருவாறு என்னை அகதி என்று அங்கீகரித்துவிட்டனர். இந்தக் காலப்பகுதியில் எனது வயிற்றுப்பகுதியில் ஏற்பட்ட காயம் காரணமாக சாப்பிடும்போதெல்லாம் வயிறு வீங்கத் தொடங்கிவிடும். அதற்கு சிக்கிச்சை பெறுவதற்காக எட்டு வருடங்கள் காத்திருக்கின்றேன். கடைசியில் நவ்று கொள்ளையர்களிடம் அடிவாங்கிதான் இங்கு வரவேண்டியிருக்கிறது.

"நவ்று மக்களையெல்லாம் குற்றவாளிகள் அல்லது வழிப்பறியாட்கள் என்று நான் ஒருபோதும் சொல்லப் போவதில்லை. அவர்களில் நல்ல மனிதர்களும் இருக்கின்றனர். அத்துடன்,இச்சம்பவம் எனக்கு முதல் தடவை அல்ல. இது மூன்றாவது சம்பவம். இச்சம்பவங்கள் குறித்து நான் பொலிஸ் முறைப்பாடு செய்திருக்கின்றேன். ஆனால் பலன் ஏதும் இல்லை" - என்று சொல்லிக் கொண்டிருந்தவர், இடையில் "ஆ ஆ." என்று சத்தமிட்டார். மீண்டும் "சதீஸ்!.." - என்று அழைத்தோம். "பல தடவைகள் ஊசிகள் போடுவர். அதில் ஒன்று கடுமையாக வலிக்கும். எலும்பு முறிவுக்கு ஒப்பானது" - என்று கூறிவிட்டு பேச்சைத் தொடர்ந்தார்.

**(21ஆம் பக்கம் பார்க்க)**



கருணாகரன்

# ஆமேன் யோசுவா!

## புதியவகை வாழ்வாதார மேம்பாட்டு புரட்சி

## கிளிநொச்சியில் ஒளிவீசும் ஆச்சரியம்!

ஒரு மதகுருவை நீங்கள் நல்லதொரு சமையல் காரராகப் பார்த்திருக்கிறீர்களா? அதிலும் ஒவ்வொன்றையும் புதிது புதிதாக ஆக்கிப் படைக்கும் சமையல்காரராக. கிளிநொச்சியில் யோசுவா அடிகள் நல்லதொரு சமையல்காராக உள்ளார். நம்பமாட்டீர்கள், ஒரு நாள் இரவு பப்பாசியில் ஒரு பெரிய "ஸ்பெஷல் விருந்தை" ஆக்கிப் படைத்தார் யோசுவா. முதலில் பப்பாசிக்காயில் சூப். அதெப்படி, பப்பாசிச் சூப் என்று நீங்கள் கேட்கலாம். எதையும் ஆக்கும் திறனே அதைப் பெறுமதியாக்குகிறது. அதை ஆக்குகின்றோரைக் கடவுளாக்குகிறது என்று சொல்வார் மயன். ஆனால், மயனுக்கு கஞ்சிகூடக் காய்ச்சத் தெரியாது என்பது வேறு கதை. அதைப்பற்றி இங்கே வேண்டாம்.

யோசுவா என்ன செய்தாரென்றால், பப்பாசிக்காயை வெட்டித் துண்டுகளாக்கி, அளவான நீரை ஊற்றி அவிய விட்டு, அவற்றோடு அவரே ஆக்கி வைத்திருக்கும் "தான்தோன்றி"களின் கூட்டைப் போட்டார். எல்லாம் வெந்து வாசனை கிளர்ந்து வரும்போது. தட்டிலேயிருந்த காடை முட்டைகளை உடைத்து அந்தச் சூப்பினுள்ளே விட்டார். ஒரு பத்து நிமிசத்தில் மகத்தான சூப் நம்முடைய கைளில் வந்தது. குடித்தபோது மருத்துவர் சத்தியமூர்த்தி அப்படியே அசந்து போய்விட்டார். சொர்க்கம் நம்முடைய காலடியில் நின்றது. அல்லது நாங்கள் சொர்க்கத்திலிருந்தோம்.

பப்பாசிச் சூப்பைத் தொடர்ந்தது பப்பாசிப் பிட்டு. பப்பாசிக் காய்களைத் துருவிப் பூவாக எடுத்தார். அரிசியும் உழுந்தும் கலந்து உண்டாக்கிய மா, கொஞ்சமாகத் தேங்காய்த்துருவல். இந்த மூன்றையும் கலந்து பிசைந்தெடுத்தார். பிறகு,அதை அவித்து பிட்டாக ஆக்கினார்.

பப்பாசிப் பிட்டு ரெடி என்றானதும், அந்தப் பிட்டுக்கு பப்பாசியில் கறியும் கூட்டும், பொரியலும் வேறு தயாரித்தார்.

பப்பாசிக் காய்களை அளவாக நறுக்கி அவற்றை அவித்து, அவற்றுக்கு தான்தோன்றிகளின் பொடியைப் போட்டார். கூடவே கொஞ்சமாகச் சரக்குத்தூளும் மிளகாயப் பொடியும் கொஞ்சமாகத் தேங்காயும் சேர்த்தார். கறி வாசமேறிக் கமகமத்து வாயை ஊற வைத்தது.

இப்படித்தான் பப்பாசிக் கூட்டும் பொரியலும் தயாரிக்கப்பட்டன. என்ன ஆச்சரியமென்றால், ஒரு மாயம் போல இந்த அதிசயமெல்லாம் எங்களுடைய கண்களுக்கு முன்னேதான் நடந்தன.

இதற்காகத்தான் வள்ளுவர் "இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து - அதனை அவன்கண் விடல்" என்று சொன்னாரோ என்னவோ, உண்ட விருந்துக்கு மரியாதை செலுத்த வேண்டாமா என்று நாங்கள் "எதை எவன் கண் ஆய்ந்து அதை அவன் கண் விடல்" என்றொரு குறளை எழுதி யோசுவாவிடம் கொடுத்து விட்டு வந்தோம்.

ஆனால், எந்தப் போதையிலும் மயங்கி விடும் ஆளல்ல யோசுவா. அவர் ஒரு புன்சிரிப்போடு தன்னுடைய தான்தோன்றிகளைச் சுற்றிக் காட்டினார். அப்படியே காடைகளின் கூடுகளையும். அதற்குப் பக்கத்தில் ஊர்க்கோழிகளின் பண்ணையையும். அதில் நூற்றான கோழிகள் கேரிக் கொண்டும் கூவிக்கொண்டும் கொக்கரித்துக் கொண்டுமிருந்தன. நாங்கள் அசந்துபோய் வாயடைத்து நின்றோம்.

கணேசன், "வாயடைத்துச் போச்சு நண்பா, வராதாம் ஒரு சொல்லும்" என்று முருகையனின் கவிதையைச் சொன்னார். உண்மைதான், ஒருவருக்கும் ஒரு சொல்லும் வரவில்லை. யோசுவாவின் அதிசயங்களின் முன்னே அப்படி உறைந்து நின்றோம்.

இந்த வித்தையைச் செய்த யோசுவா இன்னொரு நாள் தான்தோன்றிகளை வைத்து இன்னொரு அற்புதமான சமையலைச் செய்தார். இந்தத் தான்தோன்றிகளைப் பற்றியும் கொஞ்சம் சொல்ல வேண்டும். இதொன்றும் புதினமில்லை. என்றாலும் இதைச் சொன்னால்தான் இன்று பலருக்கும் புரியும்.

நம்முடைய (ஈழ) சூழலில் உள்ள முசுட்டை, மொசுமொசுக்கை, குறிஞ்சா, வல்லாரை, புளிக்கீரை, குப்பைக்கீரை, பசளி, ஆவரசம் பூ, வேப்பம்பூ, அகத்தி, கொவ்வை, பனங்கீரை, குமிட்டில், கறிவேப்பிலை, பொன்னாங்காணி, ஆடாதோடை என்று பதினெட்டு வகையான கீரை மற்றும் பூ வகைளைச் சேர்த்துச் செய்த சமையல் அது. அத்தனையும் இயற்கையின் விளைச்சல். எதையும் யாரும் விதைப்பதுமில்லை. நடுவதுமில்லை. எல்லாமே தானாகவே தோன்றி வளர்ந்து விளைகின்ற செடிகளும் கொடிகளும் அவற்றின் பூக்களும். இதனால்தான் இவை தான்தோன்றிகள்.

இந்தத் தான்தோன்றிகளையே நம்முடைய தாயும் தந்தையும் அவர் தாய், தந்தையரும் உண்டும் திண்டும் வளர்ந்தனர். வாழ்ந்தனர்.

ஆனால், சடுதியாகக் குத்துக் கரணம் அடித்ததைப்போல எல்லோரும் இவற்றைக் கை விட்டுவிட்டோம். அதனால் யாரும் இவற்றை இப்போது கண்டு கொள்வதில்லை. ஆனால்,பலரும் மூசபயளைஉ குழமனக்காக கடுமையாகக் கஸ்ரப்படுகிறோம். அதைத் தேடியலைகிறோம். அதற்குப் பெரிய காசுவேறு செலவழிக்க வேண்டும்.

யோசுவாவோ இவற்றையே தன்னுடைய மூலாதாரமாகக் கொண்டிருக்கிறார். இவற்றைச் சாதாரண சமையலுக்கு மட்டுமல்ல, விற்பனைக்குமாகத் தயாரித்திருக்கிறார். இதற்காக பெரியதொரு ஏற்பாடே அவரிடம் உண்டு.

முதற்கட்டமாக,ஐம்பதுக்கும் மேற்பட்டோர் இதில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் இந்தத் தான்தோன்றிகளைக் கிராமங்களில் தேடிப் பெற்றுச் சேகரிக்கிறார்கள். இதைவிட கொய்யா இலை, நாவற் கொட்டை, வேப்பம் பூ, கத்தாழை, ஆவரசம் பூ மற்றும் அதன் வேர், இலை, நன்னாரி வேர், தாமரைக் கிழங்கு என்று ஏராளம் ஐயிற்றங்கள்.


இவற்றில் சிலவற்றைக் காய வைத்துப் பதப்படுத்திப் பொடியாக்கி வைத்திருக்கிறார்கள். அப்படிப் பொடியாக்கப்பட்டவை பொதிசெய்யப்பட்டு (போத்தல்களில் அடைக்கப்பட்டு) "தான்தோன்றிப் பொடி" கீரைப்பொடி, இலைப்பொடி என இப்பொழுது உலகம் முழுவதற்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஏனையவை வெவ்வேறு விதமாக அவற்றின் தன்மைக்கு ஏற்றமாதிரிப் பதப்படுத்தப்பட்டு,அவையும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. சில பொருட்கள் உள்ளூர் சந்தைகளிலேயே விற்கப்படுகின்றன.

அப்படியொரு ஐயிற்றமே, கீரை மிக்ஸர்.

இது பதப்படுத்தப்பட்ட கீரைகளின் பொடியைச் சேர்த்துச் செய்யப்படுகிறது. இதில் உள்ள விசேசம் என்னவென்றால், இயற்கையாகவே இது பச்சை நிறத்தில் (கீரை நிறத்தில்) உள்ளது. கீரை வாசனை தூக்கலாக இருக்கிறது. அத்துடன், இதில் ஊட்டச்சத்தும் அதிகம்.

இப்படித்தான் ஒருநாள் யோசுவாவிடமிருந்து அழைப்பு வந்தது. உடனே சென்றோம். அங்கே அவர் கீரையில் உருவாக்கப்பட்டிருந்த வைனைத் தந்து விட்டு,நம்முடைய முகத்தைப் பார்த்தார். எங்களுக்கு என்ன செய்வது, என்ன சொல்வது என்றே புரியவில்லை. அதை எடுத்துப் பார்த்தபோது அதன் நிறம், மணம், சுவை எல்லாம் வித்தியாசமாகவே இருந்தது.

(18ஆம் பக்கம் பார்க்க)





(17ஆம் பக்கத் தொடர்ச்சி)



# ஆமேன் யோசுவா!

சிரித்தார். “பாருங்கள் எதையெல்லாம் செய்யலாம். இதை நம்முடைய சூழலில் உள்ள கீரைகளில் இருந்தே செய்தேன். இதற்கு இனி முறைப்படியான அனுமதியைப் பெற வேணும். செய்முறையிலும் சில மாற்றங்களை - மேம்பாடுகளைச் சீர்ப்படுத்த வேண்டும்” என்று. உண்மைதான், எவ்வளவை எங்களுடைய வளங்களிலிருந்து செய்யலாம்? உருவாக்கலாம்!இப்படியான இன்னொன்று, கீரைப் பாண். மற்றொன்று. கீரைக் கேக். அடுத்தது கீரை பிஸ்கற். எல்லாவற்றையும் கீரையிலிருந்தே செய்கிறாரா என்றால் -

“இயற்கையாகக் கிடைக்கும் தான்தோன்றிகளைப் பயன்படுத்துவது உடலுக்கும் மனதுக்கும் நல்லது. செலவும் குறைவு. நம்முடைய சூழலின் இயற்கை வளத்தைப் பயன்படுத்துவது பொருளாதாரத்துக்குச் சிறப்பு.

“பாரம்பரிய உணவைக் கொஞ்சம் நவீனப்படுத்துகிறேன். அப்படி நவீனப்படுத்தும்போது எல்லோருக்கும் இதைச் சாப்பிடுவதற்கு இயலுமாக இருக்கிறது. அதோடு இதெல்லாம் மூலிகை என்ற உணர்விலிருந்து விடுபட்டு, தினமும் எடுத்துக் கொள்ளக்கூடிய உணவு என்று சாதாரண-மாகவே ஆகி விடுகிறது.

“நாளாந்தம் சாதாரணமாகவே - எங்கள் வீடுகளில் முன்பு பயன்படுத்தப்பட்டு வந்த இந்தத் - தான்தோன்றிகளை கை விட்டதால், இப்பொழுது இவற்றை மூலிகை என்ற அடிப்படையிலேயே பலரும் பார்க்கின்றனர். அப்படித்தான் பயன்படுத்தவும் விளைகின்றனர். உணவாக எடுத்துக்கொள்வதைக் கை விட்டதால், பலரும் நோயாளிக-ளாகி விடுகிறார்கள். நோய் வந்த பிறகு அதற்குப் பரிகாரம் காணவென்று இதை மூலிகையாக எடுக்கப்பார்க்கிறார்கள். இது எவ்வளவு தவறு? இதை மாற்றியமைக்க வேண்டும் என்ற முயற்சியே இதெல்லாம்” - என்கிறார் யோசுவா.

ஆமாம், யோசுவாவின் பணிகளில் முக்கியமான ஒன்று இயற்கைக்குத் திரும்புதலாகும். இயற்கையின் வழி வாழ முற்படுதல். இதற்காக அவர் கிளிநொச்சியில் “காவேரிக் கலா மன்றம்”என்ற அமைப்பை நிறுவியிருக்கிறார். கிளிநொச்சியிலிருந்து கிழக்கு மாகாணம், தென்னிலங்கை மற்றும் யாழ்ப்பாணம் என இலங்கை முழுவதற்கும் இந்த இயற்கை வழி வாழ்க்கையை - தான்தோன்றிகளோடு வாழ்தலை விரிவாக்கி வருகிறார். இதில் இயற்கை வழி விவசாயம், இயற்கை உணவு, மரபு வழிக் கலாசாரச் செயற்பாடுகள், நவீன இலக்கியம், தொழுநோய் விழிப்புணர்வு, சூழற் பராமரிப்பு எனப் பலவற்றையும் செய்து வருகிறார்.

இதைவிட,இயற்கை விவசாயப் பண்ணைகளையும் உருவாக்கியிருக்கிறார். கூடவே தான்தோன்றிகளில்




வாழ்வைக் கொண்டாடுவோரை அடையாளம் கண்டு அவர்களை ஊக்கப்படுத்தி வருகிறார். இதில் சாதனைப் பெண்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வுகள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. இந்த மாதமும் இயற்கை உணவுச் சமையலோடும் விருந்துக் கொண்டாட்டம் நடந்தது. அதில் இன்னொரு புதிய உணவை அறிமுகப்படுத்தினார் யோசுவா. அது கீரைச் சம்பல்.

இந்தக் கீரைச் சம்பலில் ஆறு வகையான உலர்த்தப்பட்ட கீரைகளும் கருவாட்டுத் தூளும் உப்பு,மிளகாய்த்தூள், சிறிய அளவு சரக்குத் தூள் ஆகியவையும் சேர்க்கப்பட்டிருந்தன. உலர்த்தப்பட்ட கலவை போலிருக்கும் இந்தச் சம்பலின் ருசியோ பிரமாதம். எப்படி கீரை மிக்ஸரில் ஊட்டச் சத்து அதிகமாக உள்ளதோ,அதைப்போல இந்தச் சம்பலிலும் சத்துக்கள் அதிகம்.

இதில் உள்ள சிறப்பு என்னவென்றால், புதிய புதிய உணவுகளையும் உணவாக்கல் முறைகளையும் யோசுவா அறிமுகப்படுத்துவதாகும். அவரே பயிரிடுகிறார். அவரே தான்தோன்றிகளை சேகரிக்கிறார். அவரே அவற்றை உணவாக்கித் தருகிறார். அவற்றை எப்படிப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று நமக்கும் அறிமுகப்படுத்துகிறார்.

இப்படித்தான் பண்ணைகளில் பன்றி தொடக்கம் ஊர்க்கோழி வளர்ப்பு, காடை வளர்ப்பு, ஆடு, மாடு, முயல் வளர்ப்பு என கால்நடை வளர்ப்பையும் செய்கிறார். மட்டுமல்ல, சிறு குளத்தை உருவாக்கி, அதில் மீன் வளர்ப்பும் நடக்கிறது. இந்தப் பண்ணைகளில் சுற்றுலாப்பயணிகளுக்கான விடுதி வசதியும் உண்டு. இயற்கை உணவோடுகூடிய விடுதிகள். இங்கே கிடைக்கின்ற பொருட்களிலிருந்தே நீங்கள் கேட்கின்ற உணவு தயாரிக்கப்படுகிறது. மீன் வேண்டுமென்றால் உடனடியாக - கண்முன்னாலேயே மீனைப் பிடித்து உணவைத் தயாரிக்கிறார்கள்.

உண்மையில் இன்றைய சூழலில் - அதுவும் போரினால் பாதிக்கப்பட்ட வன்னியில் - இயற்கை வளங்கள் அதி-கமாக உள்ள பெரும் பிரதேசத்தில் உள்ள வளங்களைப் பயன்படுத்தும் பெரியதொரு பணி இது. இதில் ஏராளம் பேருக்கு வேலை வாய்ப்பு வேறுண்டு. பொருளாதாரத்தில் பின்தங்கிய வறிய மக்கள், ஊட்டச் சத்துள்ள உணவைப் பெறுவதென்பது கடினம். அதைப் போக்குவதற்கு எளிய முறையில் - இயற்கையிலிருந்து இயற்கை உணவாகவே - பெறக்கூடிய வழியைக் காட்டுகிறார் யோசுவா. என்பதால் இது யோசுவா காட்டும் வழி எனலாம்.

இதையெல்லாம் அவர் செய்கின்ற, செயற்படுத்துகின்ற விதமே நம்முடைய கவனத்திற்குரியது. அவருடைய வாழ்க்கையிலிருந்தே அவர் இதைக் கற்றுக் கொண்டார். மிக வறிய குடும்பப் பின்னணியிலிருந்து வந்தவர் யோசுவா. அவருடைய இளமைப்பராயம் இந்தத் தான தோன்றிகளோடுதானிருந்திருக்கிறது. அவர் வாழ்கின்ற சூழலில் கிடைக்கின்ற இலை, குழை, கிழங்கு, பூ, காய், கனி என்ற தான்தோன்றிகளையே உண்டு வளர்ந்தவர் யோசுவா. பின்னாளில் அவர் அமெரிக்கா, லண்டன் போன்ற இடங்களுக்குச்சென்றபோதும்கூட,அங்கேயுள்ள இயற்கை விவசாய முறைகளின் மீதே அவருடைய கவனம் இருந்திருக்கிறது. ஊர் மீண்ட பிறகு அதை விரிவாக்கும் நோக்கோடு,பல விதமாகச் செயற்படத் தொடங்கினார். அதிலே அவர் கண்டறிந்தது, எதையும் போதிப்பதைவிட அதைச் செய்து அளிப்பதே சிறப்பு என்பதே. அதன்படியே அவர் ஒவ்வொன்றையும் செய்வதைப் பற்றிச் சிந்தித்தார். அப்படியே எல்லாவற்றையும் செய்து - செயற்படுத்தி வருகிறார்.

இப்பொழுது யோசுவா என்ற சமையற்காரன் உங்கள் வீடுகளுக்கும் வந்து சமைப்பார். அப்படித்தான் ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று இயற்கைச் சமையலை - எளிய சமையலைச் செய்துவருகிறார். கூடவே,மீட்பராகவும் காப்பராகவும் செயற்பட்டுக்கொண்டிருக்கிறார். எதற்கு மீட்பர், எதை மீட்கிறார் என்றால், நாம் கைவிட்ட நல்லவற்றையெல்லாம் மீட்டெடுக்கிறார். தான்தோன்றிகள் அவற்றிலொன்று. இது கைவிடப்பட்டுக் காணாமலாக்கப்பட்டவற்றை தேடி மீட்பதாகும். இதைப்பற்றி - இந்தக் காணாமல் ஆக்கப்படுவதைப்பற்றி ஒரு கதையே எழுதியிருக்கிறார்.

இதைப்போல,இந்த இனங்கள் - எங்கள் உற்பத்திகளின் இனங்கள் - அழிக்கப்படுவதைத் தடுத்துக் காப்பாற்றும் முயற்சியிலும் ஈடுபட்டிருக்கிறார். பல அருமையான பயிர்களும் இயற்கை உணவுகளும் இன்று நம்மால் கைவிடப்பட்டு அவை அழிந்து போயிருக்கின்றன. மிஞ்சியவையும் அழிந்துபோகும் அபாயத்திலிருக்கின்றன. ஆக மொத்தத்தில்,இந்த இனவழிப்புக்கு தெரிந்தோ தெரியாமலோ நாமே காரணர்களாகவும் இருக்கிறோம்.. எனவே இதைத் தடுத்து, இதையெல்லாம் காப்பாற்ற வேண்டும் என்பது யோசுவாவின் விருப்பார்வம்.

மீட்பரும் காப்பருமாக உள்ள ஒரு மதகுருவை நாங்கள் அறிவது விவசாயியாக, பண்ணையாளாக, சமையற்காரராக, கூத்துக் கலைஞராக, எழுத்தாளராக, கவிதை சொல்லியாக, இயற்கையின் உபாசகராக.

அவர் பிறர் முகத்தில் காண விரும்புவது மகிழ்ச்சியை. பிறரிடத்தில் காண முயற்சிப்பது இயற்கைக்குத் திரும்புதலை. புதிதாக்குதலுக்கும் புதிது அளித்தலுக்குமே எப்போதும் இடமுண்டு. அதற்கே ஈர்ப்பும் கவர்ச்சியுமுண்டு. படைப்பின் சிறப்பே அதுதான்.

ஆமேன் யோசுவா!


ஆதிவாசி கனக துர்க்க பூசாரி
பண்டித் லக்ஸ்மன் ராஜ்
வியாபார பிரச்சினைகள்
குடும்பப் பிரச்சினைகள்
விவாகரத்துப் பிரச்சினைகள்
பணப் பிரச்சினைகள்
காதல் பிரச்சினைகள்
திருமணப் பிரச்சினைகள்
எதிரிகள் பிரச்சினைகள்
அதிஸ்டம் போன்றவைகள்...
100% SATISFACTION GUARANTEED
நம்பிக்கைதான் வாழ்க்கை
கைரேகை, முகம், புகைப்படம் பார்த்தல்
* ஒருமுறை நேசித்தவரை மீண்டும் கொண்டுவரக்கூடிய நிபுணத்துவம் வாய்ந்தவர் *
உங்களுக்கு பிரச்சினை உண்டா? நான் தீர்வு வைத்திருக்கிறேன்
முன்பதிவுகளுக்கு:
0413 883 998, 0469 300 470
10/130 Pendle way,
Pendle Hill, NSW 2145


CEYLON EXPRESS
MONEY TRANSFER
❖ Best Rates Guarantee
❖ Same Day Bank Transfer
❖ Responsible Customer Support
❖ Easy, Quick Internet Money Transfer
127, Walker st, Dandenong
CONTACT : OSMAN 0402 396 052

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI



ஊழிக்காலம்-2

20



# புயலுக்குப்பின்...



எல்லோரும் இயல்பு நிலைக்குள் திரும்பியது போல, தத்தமது வேலைகளில் ஈடுபட்டனர். 'பீ' புளொக்கில் உள்ள பிள்ளைகள் சிலர் தையல் பழக பார்வதியை அணுகினர். இதுவரை அங்கே ஜானகி தைத்துக் கொண்டிருந்தாலும், அவள் யாருக்கும் கற்றுக் கொடுப்பதில்லை. அது தன் வருமானத்தைப் பாதிக்கும் என்பதில் அவள் கவனமாக இருந்தாள்.

மாத சுத்தித் துணியிலேயே தையல் பழகிய பிள்ளைகளின் தொகை மெல்ல மெல்ல அதிகரித்தது. மரக்கறிகள் கொண்டுவரும் கிராம சேவையாளர் இதை அவதானித்துவிட்டு. தானாக முயன்று ஒரு கிறிஸ்தவ சபையினரின் ஊடாக கொஞ்சம் துணிவகைகளையும், ஊசிகள் - நூல் போன்றவற்றையும் அன்பளிப்பாக பெற்றுத்தந்தார். பத்ரா அவற்றைப் பிள்ளைகள் சார்பாக பெற்றுக் கொண்டாள். எனினும்,அதைப் பகிர்ந்து வழங்கவில்லை.

கன்ரீன் வைத்து நடத்திய நிஸார், ஊசிகள் - நிறநூல்கள் போன்ற சிறு பொருட்களை - கேட்டதற்கிணங்க - கொண்டுவந்து விற்றான். பொருட்கள் கிடைத்ததும் பிள்ளைகளில் மேலும் பலர் தையல் பழக ஆரம்பித்தனர். பார்வதிக்கும் இது மகிழ்ச்சியைத் தந்தது. உற்சாகமாக சொல்லிக் கொடுத்தாள். பிள்ளைகளில் அநேகர் வீட்டிலிருந்து பார்க்க வருவோரிடம் பணம் வாங்கி,அவற்றைக் கொண்டு துணி நூல் என்பவற்றை வாங்கி உடைகளை தைக்க ஆரம்பித்தனர். ஏராளமான பிள்ளைகளின் பெற்றோர் வசதியற்றவர்களாக இருந்தனர். பிள்ளைகளுக்காக கெட்டுப்போகாத உணவு வகைகளைக் கொண்டுவந்து கொடுத்தனர். பணமோ வேறெதுவோ அவர்களால் கொண்டுவர முடியவில்லை.

சில பெண்கள் வரும்போதே பணத்துடன் வந்திருந்தனர். அவற்றை, பார்க்க வந்தவர்களூடாக வீட்டுக்கு அனுப்பினார்கள். அநேக பிள்ளைகளைப் பார்க்க யாரும் வருவதில்லை. பெற்றோருக்கு இவர்கள் இங்கே இருப்பதும் தெரியாது. சிலருக்குப் பெற்றோரே கிடையாது.

பார்வதிக்கு அருகே இருந்து பார்வதிக்கு சேவை செய்யும் கலை என்பவள்,சிறு வயதிலேயே பெற்றோரை யுத்தத்திற்குப் பலி கொடுத்தவள். அவள் பாட்டியிடம் வளர்ந்தவளாம். இவளைப்போல இன்னும் சிலர், விசேடமாக செஞ்சோலைப் பிள்ளைகள் பலர் போராளிகளாக்கப்பட்டு இங்கேயிருந்தனர். இவர்களுக்கு இங்கே கொடுக்கும் உணவுப் பொருட்களைத்தவிர வேறெதுவும் கிடைப்பதில்லை. எனவே அருகிலுள்ளவர்கள்,தமது பலகார வகைகளில் இவர்களுக்கும் கொடுப்பர்.

சில பணக்காரப் பெண்கள் தமது ஏவல்களைச் செய்ய, இது போன்ற வசதியற்ற பெண்களை சேர்த்து வைத்திருப்பதும் அவர்களை 'கடைக்குப்போ! தண்ணீர் பிடித்து வா! தேநீர் வை' - என சொல்லி வேலை செய்விக்கும்போது அதில் அவர்களுக்கும் பங்கு கொடுப்பதும் நடந்தது. இவர்களும் சளைக்காமல் கன்ரீனுக்குப்போய் பொருட்கள் வாங்குவது, குளிப்பதற்குத் தண்ணீர் பிடித்து வைப்பது. சாப்பாடு எடுத்துக் கொண்டு வந்து கொடுப்பது. துணி காயப்போடுவது என்று எல்லாம் செய்தார்கள். எல்லாம் அவர்கள் கொடுக்கும் நல்ல உணவுப் பண்டங்களுக்காக.

பார்வதிக்கும் அவளைப் பார்க்க வர யாரும் இல்லை. அவளது உறவினர்களெல்லாம் ஆனந்தக்குமாரசாமி முகாமில் அடைபட்டுக் கிடந்தார்கள். மகன் இறந்து போனான். மருமகளோ பிள்ளைகளோ பார்க்க வரவில்லை. காரணம், தாய் - தந்தை - சகோதரர்கள் மட்டுமே பார்க்க அனுமதி இருந்தது. அவர்களும் தத்தம் பகுதி கிராம சேவையாளரிடம் அனுமதி பெறவேண்டியிருந்தது. தனது பகுதியில் இவர் வசிக்கிறார் என்றும் அவரது பிள்ளையே தடுப்பில் உள்ளார் என்றும் உறுதிப்படுத்தியே கடிதம் வழங்க வேண்டியிருந்தது.

எப்படியோ ராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருந்தவர்கள்,தமது பிள்ளைகள் விடுதலைப் புலிகளாக இருந்ததை ஒரு போதும் வெளியிட்டதில்லை. அதுவும், தாம் வாழும் அயலிலுள்ளவர்களுக்கு தமது பிள்ளை வெளிநாட்டில் வசிப்பதாகவே சொல்லிக் கொள்வர். ஏனெனில், தம் பிள்ளை புனர்வாழ்வுமுகாமில் தடுப்பில் உள்ளார் என்று சொன்னால், புலனாய்வாளர்களின் நேரடி அல்லது மறைமுகக் கண்காணிப்புக்குள் வந்து விடுவர்.

பிள்ளைகளை சந்திக்க வருபவர்,தன் கடிதத்தை முகாமின் முன்பாக உள்ள அரணில் கொடுக்க வேண்டும். பொலீஸ் உத்தியோகத்தர் அதைத் தன் பதிவேட்டில் பதிந்து கொள்வார். பிறகு, அக் கடிதத்திலேயே பரிந்துரை செய்வார். தான் பரிந்துரைத்த திகதியையும் போட்டு, பதினைந்தாவது நாள் ஒரு திகதியும் போடுவார் அதற்குமுன் மீண்டும் பார்க்க வரமுடியாது. அக்கடிதம் நாற்பத்தைந்து நாட்களுக்கே செல்லுபடியாகும். அதன் பிறகு வருவதாயின் புதிய கடிதம் பெறவேண்டும்.

இங்கு பதிவு செய்தபின், அடுத்த அரணில் பிள்ளையின் பெயர் - 'புளொக் நம்பர்' இரண்டும் கொடுக்கவேண்டும். 'புளொக் நம்பர்' தெரியாவிட்டால், பிள்ளையைத் தேடி அறிவிப்பது சுணக்கமாகும். பெயரைக் கொடுத்தபின் நீண்டநேரம் காத்திருக்க வேண்டும். பெயரை ஒரு சிறுதுண்டில் எழுதிக்கொண்டு சென்று ஒவ்வொரு புளொக்கிலும் வாசிப்பார்கள். பெயருக்குரியவருக்கு யார் வந்திருப்பது என்று தெரியாது எனினும்,நல்ல ஆடை அணிந்து கொண்டு புறப்படுவர்.

இவர்களை இரு ஆமிப் பெண்கள் அழைத்துச் சென்று ஒரு கொட்டகையில் ஒருபக்கமாக நிறுத்துவர். இடையில் சுருள் கம்பி போட்டு அதன் இரு பக்கமும் முட்கம்பிவேலியும் இடப்பட்டிருக்கும். பார்வையாளர் அந்தப்பக்கமும் பார்க்க வந்தவர் இந்தப்பக்கமும் நிற்பர். எட்டியும் தொடமுடியாது. அவர்கள் கொண்டுவந்த பொருட்கள் பிள்ளைகள் முன்னிலையிலேயே சோதனையிடப்பட்டு கொடுக்கப்படும்.

கடிதப்போக்குவரத்து அனுமதிக்கப்பட்டிருந்தது. கடிதங்களை எழுதி விலாசமிட்டு முகாம் பொறுப்பாளரிடம் சேர்க்க வேண்டும். அவள் அதை முகாம் பொறுப்பிலுள்ள ஆமிக்காரியிடம் கொடுப்பாள். அதை அவள் அலுவலகத்தில் சேர்ப்பாள். அவ்வளவு கடிதங்களையும் சிங்களம் தெரிந்த தமிழ் போராளி ஒருவரின் துணையுடன் வாசித்து முடிக்க வேண்டும. அது தினசரி நடக்கும் வேலையல்ல. இந்த வேலை நடக்கும்போது ஒரு சார்ஜன்ட் தர பெண் அதிகாரி கூட இருக்க வேண்டும் எனவே,அவள் தனக்கு விருப்பமான போதிலேயே கலந்து கொள்வாள். ஆக,கடிதங்கள் வாசித்து முடிய ஒரு மாதமாவது எடுக்கும். பின்னர், அவை தபாற்கந்தோரை அடைய, இரண்டு - மூன்று நாட்கள் எடுக்கும். அதற்குப்பின்,கடிதங்கள் உரியவரிடம் சென்று பதிலும் போடுவார்கள். மீண்டும் பதில்கடிதங்களும் போன முறையில்தான் திரும்பவந்து சேரும். இதற்குள் பார்க்க வாய்ப்புள்ள பெற்றோராயின்,இரண்டு தடவைகள் நேரில் வந்து போய்விடுவர்.

பார்வதியை யாரும் பார்க்க வரவில்லை. அப்பா, அம்மா,சகோதரர்கள் மட்டுமே பார்க்கமுடியும். பார்வதிக்கு அப்படி யாரும் இல்லை. எனினும், மற்றப்பிள்ளைகளுக்கு வரும் உணவுப் பண்டங்களில் ஒரு பங்கு பார்வதிக்கு வந்துவிடும். அவர்களுக்கு அவள் தையல், பின்னல் பழக்கும் ரீச்சர். சிங்களம் - ஆங்கிலம் கற்பிக்கும் ரீச்சர். மன உளைச்சல்களுக்கான ஆலோசனைகளை வழங்குவதுடன், கூட்டுப்பிரார்த்தனையும் செய்தாள்.

அந்த மாதம் அவளுடைய பிறந்தநாள் வந்தபோது ஒருகாலமும் இல்லாததுபோல சிறப்பாக கொண்டாடினார்கள். பார்வதி காலையில முந்நூறு ரொபிகளடங்கிய இரு பைகளை வாங்கி அனைத்துப் பிள்ளைகளுக்கும் விநியோகிக்கும்படி கலையிடம் கொடுத்துவிட்டாள். இந்தவகையில் செய்தி பரவிவிட்டது. சற்று நேரத்துக்கெல்லாம் கன்ரீனுக்குப்போய் பொருட்களை வாங்கினார்கள். கேக், ரோல்ஸ், சொக்லட் என உணவுப் பொருட்களும் குளிர்பானமும் வாங்கி வந்தனர். இவைதவிர,ஒரு ரோச்லைட், நெஸ்டோமோல்ட், பிஸ்கட் பைக்கற்றுகள் என்பனவும் பரிசாக வந்தன.

இவ்வளவு மகிழ்ச்சியாக அந்த விழா நிறைவுற்றாலும் இரவு தூங்கும்போது அவள் பேரர்களை நினைத்து அழுதுகொண்டே தூங்கினாள்.

மறுநாள் ஒரு கணக்கெடுப்பு நடந்தது. யாருமே பார்க்க வராதவர்களை வெளியே வரும்படி கூறினார்கள். பார்வதியும் கலையும் வெளியே சென்றனர். வெளியே சுமார் ஐம்பது பேர் வரை நின்றனர். ஒரு அதிகாரி புதிதாக வந்திருந்தான்.

“அப்பா அம்மா இல்லாதவங்க இங்கால வாங்க” - என்றான் பார்வதி அந்தப்பக்கம் போனாள். எனினும் அவளுடைய வயதில் அப்பா அம்மா இருப்பது அருமைதானே.

“சகோதரர்கள் வருவதில்லையா? என்றான் அதிகாரி.

“வருவார்கள்,நான் இங்கிருப்பது அவர்களுக்குத் தெரியாது” - என்றாள்.

“பிள்ளைகள்..”

“ஆனந்தக்குமாரசாமி முகாமில்..”

இப்படி தனித்தனி ஒவ்வொருவரையும் விசாரித்து, எழுதிக்கொண்டான்.

“உறவினர்களையும் பாக்க அனுமதிக்கிறோம். வராத உறவினர்களை தேடிக் கொடுக்கிறோம். தெரியாத உறவினர்களுக்கு செய்தி அனுப்புகிறோம்” - என்று வாக்களித்தான். செய்வானா?

இரண்டொரு தினங்களின் பின் பார்வதிக்கு எதிர்பாராத விதமாக பார்வையாளர்களிடமிருந்து பொருட்கள் வந்தன. கூடவே, இரு கடிதங்களும். ஒன்று தீபனா அவசரமாக எழுதியிருந்தாள் 'அம்மம்மா! நானும் வருவதற்குப் பதிவு செய்திருந்தேன். பொருட்களைக் கட்டினேன். பஸ்ஸில் இடம் போதாமையால் விட்டுவிட்டார்கள். பொருட்களை அனுப்புகிறேன். அடுத்தமுறை வருவேன்'

அவசரக் கிறுக்கல். அடுத்தது அம்பிகா எழுதியிருந்தாள். தாங்கள் சுகமாகவும் எல்லோரும் ஒன்றாகவும் இருப்பதாக எழுதியிருந்தாள். 'நீங்கள் ஏன் கடிதம் போடவில்லை' - என்றும் கேட்டு,கடிதம் போடுவதற்கான விலாசத்தையும் தந்திருந்தாள். அது ராணுவக் கட்டுப்பாட்டை மீறி பலகாரப்பையுடன் பார்வையாளர்களூடாக பத்திரமாக வந்திருந்தது.

அன்று ஒரு நல்ல செய்தி முகாமை அதிரச்செய்தது.

“பார்வதிக்கு பார்வையாளர்கள் வந்திருக்கிறார்கள்” - என்றபடி ஓடிவந்தாள் அனுசுயா. பார்வதியின் பெயர் அழைக்கப்பட்டபோது பிள்ளைகள் பெருமகிழ்ச்சியில் கூச்சலிட்டனர்.

பொதுவாக பார்வையாளர்களாக வருவோர், கை நிறைய தின்பண்டங்கள், குளிர்பானம் பழவகைகள் என நிரம்பப் பொருட்களைக் கொண்டு வருவர். பிள்ளைகள்திரும்பி வரும்போது இரு கைகளிலும் சுமக்க முடியாமல் சுமந்து வருவர். அது அவர்களது பெற்றோரின் அன்பு. அருகில் வைத்துப் பார்க்க முடியாத சோகம். பொருட்களால் நிரவல் செய்யப்படுகிறது. பார்வதி இந்த எதிர்பார்ப்புகளுடன் போகவில்லை. அவளை யார் பார்க்க வருவார்கள் என்பதே அவள் மனதில் பெரும் கேள்வியாய் இருந்தது.

முகாம்களின் வீதி கடந்து சந்திப்புக் கூடத்தை நெருங்கும்போதே அவளை நோக்கிக் கையை அசைத்தான் அவளது மருமகன். பார்வதியின் தம்பியின் மகன். கூடவே தங்கை புவனாவும் வந்திருந்தாள்.

“எப்பிடி மாமி சுகமாயிருக்கிறீங்களா?

“ஓ...இஞ்ச தனிய இல்லைத்தானே. எவ்வளவு பிள்ளையள் இருக்கினம்”

“நான் முதலொருக்கா வந்தனான். சுதன் போனெடுத்து சரியான பேச்சு. 'உங்களுக்கெல்லாம் எவ்வளவு செய்தவ, கிட்டத்தானே இருக்கிறியள் போய் பாத்தா என்ன' - எண்டு. நான் வர, இஞ்ச விடமாட்டமெண்டுபோட்டாங்கள். இப்ப புவனா மாமிய கெஞ்சி மண்டாடி, அவவின்ர பேரிலதான் விதானையிட்ட கடிதம் எடுத்தனாங்கள். அவவோட கூடி உள்ளுக்க வந்திட்டன்” - என்று சொல்லிமுடித்தான்.

(21ஆம் பக்கம் பார்க்க)

# புயலுக்குப்பின்...

(20ஆம் பக்கத் தொடர்ச்சி)

புவனா,இவன் பேசுவதைக் கேட்டுக் கொண்டு மௌனமாக நின்றாள். பார்வதியின் கடைசித் தங்கை 'ஏதோ இந்தளவிலாவது வந்தாளே' - என மகிழ்ந்தாள் பார்வதி. ஒரு குளிர்பானப் போத்தல் அவள் கையிலிருந்தது.

"சரியான வெயில், குடிப்பமெண்டுதான் வாங்கினாங்கள், இந்தா நீ குடி" - என்று அதை பார்வதியிடம் நீட்டினாள். அதை தன் கையில் வாங்கிய மருமகன் புலேந்திரன் எட்டி பார்வதியிடம் நீட்டும்போதே அத்துடன் சில கடிதங்களையும் அவள் கைகளுக்குள் திணித்தான்.

"உங்களுக்கு குடுக்கச்சொல்லி இருபதாயிரம் ரூபா தந்தவன் சுதன். பத்தாயிரம் கொணந்தனான் பிடியுங்கோ" - என்று நீட்டினான். அதை மறுத்த பார்வதி,

"எனக்கேன்ரா காசை, நீ வச்சிரு. எனக்கொரு டிக்சனறியும் ஒரு சோடி தோடும் எடுத்து கொண்டுவா போதும்" - என்றவள்,ஒரு ஆயிரம் ரூபாத்தாளை மட்டும் எடுத்துக் கொண்டாள்.

"சரி மாமி,தினேஸ் வீட்டில நிண்டுதான் போனவன் கடிதம் போட்டிருக்கிறான்" - அவன் பேச்சை முடிக்குமுன்பே -"சரி சரி வெளிக்கிடுங்கோ" - என்று ஆமிக்காரி சத்தமிட்டாள்.

"சரி எல்லாம் அதில இருக்கு,அப்ப நாங்கள் போயிற்று வாறம்" - என்றவாறு அவர்கள் புறப்பட்டனர்.பார்வதி வழியிலேயே கன்ரீனில் இரண்டு பிஸ்கட் பெட்டிகளையும் சில இனிப்புப் பண்டங்களையும் வாங்கினாள்.

"ஆ...மம்மீ மம்மீவந்திட்டா" - என்றவாறே ஓடி வந்தவர்களிடம் அதைக் கொடுத்தாள்.

"அடீயே... ஏன்ரீ அவவின்ர பிஸ்கட்ட வாங்குறீங்க அவா வயசு போனவா, ரீ குடிக்கிற நேரம் வச்சு சாப்பிடுவாதானே,நல்ல பழக்கம்" என்று மல்லிகா கடிந்து கொண்டாள்.

பார்வதி ஆறுதலாக அமர்ந்து கடிதங்களைப் பிரித்தாள். முதல் அவள் பிரித்தது ராணியின் கடிதம். தாங்கள் முகாமிலிருந்து வெளியேறிவிட்டதாகவும் அண்ணனுடன் தங்கியிருப்பதாகவும் அது குறிப்பிட்டது. அடுத்து தீபனாவின் கடிதம். மாமி ,அண்ணா, பிள்ளைகளுடன் வெளியே சென்றுவிட்டதாகவும் அவருடைய அண்ணனுடன் மாமி தங்கியிருப்பதாகவும் தினேஸ் மாமாவுடைய நண்பர் ஒருவர் வீட்டில் தங்கியிருப்பதாகவும் அறிந்ததாக எழுதியிருந்தாள். அநேகமாக வவுனியாவில்தான் என்று குறிப்பிட்டிருந்தாள்.

இவர்களுக்கு முகாமில் என்ன நடந்தது? கலா என்ன ஆனாள்? மற்றவர்களுடைய நிலை என்ன? எதுவும் தெரியவில்லை.

ராணி பிள்ளைகளுடன் அண்ணாவிடம் சென்றால்,திருகோணமலை, அல்லது யாழ்ப்பாணம் சென்றிருப்பர். பிள்ளைகள் நன்றாக இருப்பார்கள். ஆனால், தினேஸை ஏன் அவர்கள் தம்முடன் கூட்டிச் செல்லவில்லை. தம்முடன் கூட்டிச் செல்ல முடியாதெனின், ஏன் அவனை முகாமைவிட்டு வெளியே கொண்டு வந்தனர். பார்வதிக்கு பலபல சந்தேகங்கள் வந்தாலும், அவற்றுக்கு விடைகாண முடியவில்லை. எப்படியும் அடுத்த வாரம் வருபவர்கள்தான் அவளது சந்தேகங்களை தீர்த்து வைக்க முடியும் எனக் காத்திருந்தாள்.

அடுத்த தடவை,வந்தபோது புலேந்திரனிடம் பார்வதி பலவாறாக கேள்விகளை கேட்டாள்.

"அங்க உள்ளவையப் பார்க்கப் போறவை வீட்டுக்க சீ,ஐ,டி. வாறானாம். என்னத்துக்குப் போறாய் எண்டு பெரியமாமி பேசினவா" - என்று போன கிழமை வந்தபோது சொன்னவன் என்பதும் பார்வதியைக் கலக்கியது.

"அப்பிடியெண்டா இஞ்ச ஆயிரக் கணக்கில பிள்ளையள் இருக்கு ஆயிரக்கணக்கில சனம் வருது. நீ சொல்லுறதைப் பாத்தா புதினமாக்கிடக்கு" - என்ற பார்வதி அவனது மிரட்சியடையும் கண்களைப்பார்த்து,

"ஏன்ரா உன்னட்ட ஏதும் விசாரிச்சவங்களா?" - என்று கேட்டாள்.

"மாமி... போனமுறை வந்தபோது, அங்கால தனியாக் கூட்டிக்கொண்டு போய்,மாத்தி மாத்தி கேள்வி கேட்டு வெருட்டத் தொடங்கிட்டாங்கள். நான் பிடிச்ச பிடியில மகன்தான் என்று சொல்லிப்போட்டன்."

"வீட்ட வந்தவங்களோ..?"

"இவங்கள்தானோ தெரியாது,ஆரோ வந்தவங்களாம். பிள்ளையள்தான் நிண்டிருக்கினம் அப்பா இல்லை எங்கயோ வெளியில போட்டார் எண்டு சொன்னவையாம்"

பார்வதி இப்போதும் அலட்சியமாகவே பதில் சொன்னாள்."உன்னை மற்றவை நல்லாப் பயப்பிடுத்திப் போட்டினம்" - என்றளவில் முடித்தாள்.

இந்த உரையாடலுக்குப்பின் புலேந்திரன் வரவில்லை. ஆனால் மருமகள் சுந்தரி புலேந்திரன் கொடுக்கச் சொன்னதாக தோடும் டிக்சனறியும் கொண்டு வந்தாள். அவளும் தன்னை மகள் என்றுதான் கடிதம் எடுத்திருந்தாள். மேலும் சில கடிதங்களையும் கொண்டுவந்தாள். பார்வதியும் அவற்றைப் பெற்றாள். நேரடியாக கடிதம் வர நீண்ட நாட்கள் செல்வதால்,பிள்ளைகள் அனைவருமே பார்வையாளரூடாக கடிதங்களைப் பரிமாறிக் கொண்டனர். அதையும் மணந்து பிடித்தனர் ஆமிக்காரிகள். எங்கள் பெண்கள் அவர்களை பல்வேறு வழிகளில் உச்சிக் கொண்டிருந்தனர்.

கொஞ்சம் கொஞ்சமாக முகாம் வசதிகள் எங்கள் அளவில் அதிகரித்தன."தினகரன்" பத்திரிகை வந்தது. பிறகு, அது நின்றுவிட்டது. பரவலாக வானொலிப் பெட்டிகள் பலரிடம் இருந்ததால். பாடல்கள், செய்திகள் என்பன கிடைக்கத்தொடங்கியது. பார்வதியிடம் தையல் பழகுவோர் தொகை அதிகரித்தது.

"நல்ல காலம். மம்மி எங்களுக்கு இதை சொல்லித்தந்தது. இதில கவனம் போறதால, வீட்டுக்கவனத்தை கொஞ்சம் மறந்திருக்கிறம்" - என்றாள் மல்லிகா. இதுவரை தன் தாய்க்கென ஒரு நைட்டியையும், பாவாடையும் தைத்து அனுப்பியிருந்தாள் அவள். இப்போது தனக்கென ஒரு சுடிதார் தைக்க ஆரம்பித்திருந்தாள். திரும்பிய பக்கமெல்லாம் பிள்ளைகள் பூவேலை செய்துகொண்டிருந்தனர்.

திடீரென ஒருநாள்,பயங்கரவாத விசாரணைப்பிரிவினர் "(ரி.ஐ.டி)"வந்து ஒரு பெண்ணைக் கூட்டிச்சென்றனர். சென்ற வாரம்,"சீ"புளொக்கிலிருந்தும் ஒரு பிள்ளையை கொண்டுபோயிருந்தார்கள். இன்று "பீ"புளொக்கில் இருந்து கொண்டு செல்லப்பட்டவள்,பாரிய காயமடைந்தவள். அவளுடைய பிறப்புறுப்பின் வாசலில் ஒரு எறிகணைச் சிதறல் இருப்பதாக மருத்துப்பிரிவுப் போராளியொருத்தி சொன்னாள். களமுனைப் படப்பிடிப்பில் நின்றவள்.

அந்த வகையில், தகவல் கொடுக்கக் கூடியவள் என சந்தேகிக்க, சிங்களம் தெரிந்த பெண்கள் அடுத்ததாகக் கொண்டு செல்லப்பட்டனர்.

(தொடரும்)

PARISH PATIENCE IMMIGRATION LAWYERS
FOUNDED 1888
IMMIGRATION LAW ACCREDITED SPECIALIST
MIA Migration Institute of Australia

Our large legal team provideds a full range of specialist immigration legal services no matter where you are in the world at competitive rates



Michael T. Jones
Legal Practice Manager
Accredited Specialist in Migration Law
MARN: 9255530
Email: MTJONES@ppilaw.com.au



Mahalingam (Shan) Sutharshan
LL.B (Col), LL.M (Monash), LL.M (ANU).
Director
MARN: 0961664
Email: SHAN@ppilaw.com.au



Prasad Pahalawela
Solicitor & Migration Agent
MARN: 12800846
Email: PRASADP@ppilaw.com.au



Ashwina Krishnan
Solicitor & Migration Agent
MARN: 1913008
Email: ASHWINAK@ppilaw.com.au

Non - Immigration Matters
- Family Law & Divorce Application
- Criminal Law
- Traffic Offences
- Commercial & Business Law

Our professional provide expert assisstance with:
- Business & Investment Visas SC188, 888, and 132
- Student SC500 and Student Dependent Visa
- SC485 (TR) and SC485 Dependent Visa
- General Skilled Migration (GSM) SC189, 190 and 489 Visa
- Skilled Assessment, SkillSelect, EOI
- State Sponsorship and Nomination
- ENS (SC186), RSMS (SC187) and TSS (SC482)
- Refugee & Asylum Seekers SC866
- Temporary Protection Visa SC785
- Safe Haven Enterprise Visa (SHEV) SC790
- Family, Partner, Child, Parent, and Carer Visa
- Visitor SC600 and Working Holiday Visa
- Distinguished Talent Visa
- Citizenship and Resident Return Visa
- Administrative Appeal Tribunal (AAT)
- Federal Circuit Court, Federal Court & High Court
- Visa Cancellation, Detention and Deportation
- Health, Character & Identity Issues (PIC4020)
- All other visas and Immigration matters
- Commercial and Property matters

Lawyers and Registered Migration Agents: T. Nguyen: Director & MARN: 0322836 | A. Dougall Lawyer & MARN: 1684660 | A Shah MARN: 1801710 | A Charif: MARN: 1803234

Parish Patience Immigration Lawyers | Level 3, 83 York Street Sydney NSW 2000 | Tel: +61 02 9286 8700 | E: PPMAIL@ppilaw.com.au | W: www.parishpatience.com.au

# நவ்று அகதிகள் மீது நடக்கும் கொள்ளை!

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

"நான் பழைய மோட்டார் சைக்கிள்களை வாங்கி 'பெயின்ட்' அடித்து திருத்தி விற்பனை செய்துவந்தேன். அன்றைய தினமும் மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு எஞ்சின் வாங்குவதற்காக - இரவு பத்து பத்தரை இருக்கும் - கடை ஒன்றுக்கு சென்று கொண்டிருந்தேன். அந்தக்கடை நள்ளிரவு வரை திறந்திருக்கக்கூடிய கடைதான்.

"அக்கடைக்கு சென்றுகொண்டிருக்கும் போது, எனக்குப் பின்னால் காரில் வந்தவர்கள் என்னை முட்டி மோதினர். அத்துடன் காரை எனக்கு மேல் ஏற்றிச்சென்ற பின்னர், மூவர் என நினைக்கிறேன்,இறங்கிவந்து என்னைத் தாக்கினர். வலி தாங்க முடியாது அலறி ஓலமிட்டேன். எனது நல்ல காலத்துக்கு குரல் கேட்கும் இடத்திற்கு அண்மையில் பொலிஸார் நின்றிருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிட்ட இடத்திற்கு உடனே வந்துவிட்டனர். அதனால்தான் இன்று உங்களுடன் பேசிக்கொண்டாவது இருக்கிறேன்" - என்றவர், இதேபோலதான் முன்னர் பங்களதேஷ் நாட்டு அகதி ஒருவரையும் காரால் அடித்துவிட்டு அவரது உடைமைகளை எடுத்து சென்றுவிட்டனர். ஆனால், அந்த வீதியால் யாரும் சென்றிருக்கவில்லை. அடுத்தநாள் காலை அவரை சடலமாகத்தான் பொலிஸார் மீட்டனர்.

"என்மீது தாக்குதல் நடத்தப்பட்ட இடத்திலிருந்து வைத்தியசாலைக்குக் கொண்டுபோகும்வரைதான் எனக்கு நினைவிருக்கிறது. இங்கு கொண்டுவந்தது எதுவும் எனக்குத் தெரியாது. இங்கு வந்து ஐந்து நாட்களின் பின்னர்தான் நினைவுவந்தது. வாயால் சாப்பிட தொடங்கி நான்கு நாட்கள்தான் ஆகின்றன. இப்போது ஓரளவுக்குப் பேசக்கூடியவாறு இருக்கிறது. எழுந்து நடக்க முடியாது. அசையவே கடி-னமாக இருக்கிறது.

"பாதுகாப்பான நாட்டைத் தேடி வந்த எங்களுக்கு, பாதுகாப்பு இல்லாத நாட்டில் வாழ்வு என்பதே கடினமாக இருக்கிறது" - என்று சொல்லிவிட்டு -

"எனது பெற்றோர்களுக்கு எதுவும் தெரியாது. ஊர் பெயரை போட்டு விடாதீர்கள்" - என்ற கோரிக்கையுடன் விடைபெற்றார்.

அவரின் உரையாடலை நிறைவுசெய்து கொண்டு நவ்றுதீவில் உள்ள அவருடைய நண்பர் ஒருவருக்கு தொடர்பு கொண்டு சதீஸ் மீதான கொடூரத் தாக்குதலின் பின்னர் அங்குள்ள அகதிகளின் மனநிலை எவ்வாறு உள்ளது என வினாவினோம். அவரும் தனது பெயரைக் குறிப்பிடவேண்டாமே எனக் கேட்டுக்கொண்டு உரையாட தொடங்கினார்.

"நான்தான் சதீஸூடன் சேர்ந்து பொலிஸ் முறைப்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கினேன். இது பாதுகாப்பு இல்லாத நாடு. அதனால்தான் பெயர் சொல்லக்கூட பயம். இந்தநாட்டில் இருப்போர் எங்களை ஒரு சுண்டெலிக்கு ஒப்பானவர்களாகவே பார்கின்றனர். சதீஸ் இன்னும் வைத்தியசாலையைவிட்டு வெளியே வரவில்லை. ஆனால், சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவரைத் தவிர மற்றவர்களை பொலீஸார் விடுவித்துவிட்டதாகச் சொல்லுகின்றனர். இதைவைத்தே எண்ணிப் பாருங்கள்,நாம் எவ்வாறான சூழ்நிலைக்குள் வாழ்கிறோம் என்று. தற்போது மாலை ஆறு மணிக்கு பின்னர் நடமாடுவதில்லை. வெளியே செல்லவே பயமாக இருக்கிறது. இங்கு எமக்கு ஏதாவது நடந்தால் எமது குடும்பத்துக்கு யார் பொறுப்புச் சொல்வர். சுதந்திரமான நாட்டில் அடைக்கலம் கோரிவந்தோம். ஆனால்,எப்போது காரால் அடித்து சாகடிக்கப்படுவோம் என்ற நாட்டில் வாழ்கிறோம். இதுதான் நமது தற்போதையநிலை" - என்றார்.

# மாத ராசிபலன்



## மேடம்

நீங்கள் விட்டுக்கொடுத்து வாழ்வதன் மூலம் சிறப்பான பலன்களை பெறுவீர்கள். இந்த மாதம் உங்கள் உடல் ஆரோக்கியம் உண்டாகும். பூமி, வீடு தொடர்பான பிரச்சனைகள் நல்ல முடிவுக்கு வரும். சகோதரர்களுடன் இருந்த மனவருத்தங்கள் நீங்கும். கோபம், படபடப்பு குறையும். எதிர்பாராத செலவு உண்டாகலாம். அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்படும். தொழில் வியாபாரத்தில் திடீர் சிக்கல் ஏற்பட்டு சரியாகும் . புதிய வாகனங்களை வாங்குவீர்கள். ஆக்கபூர்வமான முயற்சிகளில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். எதிரிகளின் இன்னல்கள் இருக்கும் இடம் தெரியாமல் போகும். கடின உழைப்பு உங்களுக்கு வெற்றியைத் தேடித் தரும்.

## இடபம்

நீங்கள் பிரச்சனையை கண்டு பயப்படமாட்டீர்கள். இந்த மாதம் கோபமான பேச்சு, டென்ஷன் குறையும். எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தாமதம் உண்டாகும். சகோதரர் வழியில் நன்மை உண்டாகும். மனதில் துணிச்சல் அதிகரிக்கும். பெண்களுக்கு எடுத்த காரியத்தை எப்படியும் முடித்து விட வேண்டும் என்பதில் மன உறுதி காணப்படும். கொடுக்கல், வாங்கல் விவகாரங்களில் கூடுதல் கவனத்துடன் செயல்படுவது நல்லது. வாழ்க்கை தரம் உயரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எல்லாவற்றிலும் மனகவலை ஏற்படும். வாகனத்தில் செல்லும் போது எச்சரிக்கை தேவை.

## மிதுனம்

உங்களுக்கு தேவையான உதவி அடுத்தவரிடம் இருந்து கிடைப்பது அரிது. இந்த மாதம் திடீர் கோபம் உண்டானாலும் சமாளித்து விடுவீர்கள். எடுத்த காரியம் உடனே முடியவில்லையே என்ற டென்ஷன் இருக்கும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் வாடிக்கையாளர்களுடன் வாக்குவாதம் போன்றவை உண்டாகலாம். பழைய பாக்கி வசூலாவதில் தாமதம் உண்டாகலாம். அரசியல்வாதிகள் மக்கள் தொடர்பான பிரச்சனைகளை சந்திக்க நேரிடும். மக்கள் பிரச்சனைகளைத் தீர்த்து அவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். பெண்களுக்கு எப்படிப்பட்ட சிக்கலையும் சமாளிக்கும் மனபக்குவம் உண்டாகும்.

## கடகம்

கடகம் - அடுத்தவர் கொடுத்த வேலையை எப்பாடுபட்டாவது செய்து முடிக்கும் கடக ராசியினரே, நீங்கள் உங்கள் வேலையை செய்து முடிப்பதில் ஆர்வம் காட்ட மாட்டீர்கள். இந்த மாதம் அடுத்தவர் குற்றச் சாட்டுகளில் இருந்து சாமர்த்தியமாக விடுபடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் நெருக்கடி யான சூழ்நிலை ஏற்பட்டாலும் அதை சமாளித்து முன்னேறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக பணிகளில் அலட்சியம் காட்டாமல் செயல்படுவது நல்லது. குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை காணப்பட்டாலும் குடும்ப உறுப்பினர் களுக்காக மருத்துவ செலவு செய்ய வேண்டி இருக்கலாம். கணவன் மனைவி ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்

## சிம்மம்

இந்த மாதம் வீண்செலவு ஏற்பட்டாலும் அதை சமாளிக்கும் விதத்தில் வரவும் இருக்கும். பயணங்கள் மூலம் அலைச்சல் அதிருப்தி உண்டாகலாம். கனவுகளால் தொல்லை ஏற்படலாம். சரியான நேரத்தில் தூங்க முடியாத சூழ்நிலை உருவாகும். உஷ்ண சம்பந்தமான நோய் உண்டாகலாம். கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் தேவையற்ற பிரச்சனைகள் உருவாகலாம். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டாலும் சரியாகிவிடும். வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் உண்டாகலாம். பிள்ளைகளுக்காக கூடுதல் செலவு செய்ய வேண்டி இருக்கும். உறவினர்களிடம் கவனம் தேவை.

## கன்னி

இந்த மாதம் எல்லாவற்றிலும் சாதகமான பலனே கிடைக்கும். பொருளாதார முன்னேற்றம் பணவரவில் திருப்தி ஆகியவை இருக்கும். எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் உண்டாகும். கலைத்துறையினருக்கு சோதனைகள் மிகுந்த காலமாக இருக்கும். வாய்ப்புகள் இருந்தாலும் உடல்நலம் ஒத்துழைக்காமல் போகலாம். சிறு பிரச்சனையாக இருந்தாலும் கவனமுடன் இருப்பது நல்லது. பெண்களுக்கு எடுத்த காரியத்தை திறமையாக செய்து முடிப்பீர்கள். பண புழக்கம் திருப்திதரும். மதிப்பு மரியாதை அதிகரிக்கும்.

## துலாம்

இந்த மாதம் காரியங்கள் தடைபட்டாலும் பின்னர் நன்றாக நடந்து முடியும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் செல்ல நேரலாம். பணம் வரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். உடல் ஆரோக்கியம் உண்டா கும். குடும்பத்தில் இருப்பவர்கள் அனுச ரித்து செல்வதன் மூலம் எல்லா பிரச்சனை களும் சரியாகும். கணவன் மனைவிக்கி டையே இருந்த மனஸ்தாபம் நீங்கும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக முக்கிய பணிகளை மேற்கொள்வீர்கள். உறவினர்கள், அக்கம் பக்கத்தினரிடம் வீண் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு எடுத்த காரியம் தடைபட்டு பின்னர் நல்லபடியாக நடந்து முடியும். மனதில் எதைபற்றியாவது சிந்தித்த வண்ணம் இருப்பீர்கள்.

## விருச்சிகம்

உங்களுக்கு தெய்வீக ஈடுபாடும் இருக்கும். இந்த மாதம் நல்ல பலன்கள் உண்டாகும். தந்தையின் உடல்நிலை யில் முன்னேற்றம் காணப்படும். கலைத் துறையினர் கடுமையாக உழைப்பின் மூலம் முன்னேற வேண்டி இருக்கும். நண்பர்களின் உதவியால் நன்மைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. கிடைக்கும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்வது நல்லது. அரசியல்வாதிகள் வெளியூர் பயணம் செல்ல வேண்டி இருக்கும். மேலிடத்திலிருந்து முக்கிய பொறுப்புகள் உங்கள் கையில் வரும். சந்தோஷமான செய்தி வந்து சேரும். பெண்களுக்கு எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். பயணங்களால் அலைச்சல் உண்டாகும்.

## தனுசு

இந்த மாதம் வீண் அலைச்சல் குறையும். எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தடங்கல் ஏற்பட்டு நீங்கும். தேவையற்ற மனக்கவலை உண்டாகும். வழக்கு விவகாரங்களில் தாமதமான போக்கு காணப்படும். நிர்பந்தமாக வெளியூர் பயணம் செல்ல நேரலாம். கலைத்துறையினருக்கு மிகவும் அனுகூல மான காலமிது. வாய்ப்புகள் குவியும். புத்திசாதுர்யத்துடன் கையாள்வதால் லாபமான காலமாக அமையக்கூடிய வாய்ப்பு உண்டு. அரசியல்வாதிகளுக்கு இனிமையான செய்திகள் தேடி வரும். நீண்ட நாளாக எதிர்பார்த்த உதவி கிடைக் கப் பெறுவீர்கள்.

## மகரம்

நீங்கள் நேர்மைக்காக பாடுபடுவீர்கள். இந்த மாதம் பணவரத்து சீராக இருக்கும். வேலை பளு காரணமாக நேரம் தவறி உணவு உண்ண வேண்டி இருக்கும். வயிறு தொடர்பான கோளாறுகள் ஏற்பட்டு நீங்கும். குடும்பத்தில் இருப்பவர்களால் திடீர் பிரச்சனைகள் அதனால் வாக்குவாம் போன்றவை உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்று ஏற்படலாம். விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. சிலர் குடும்பத்தை விட்டு பிரிந்து வெளியில் தங்க நேரலாம். பெண்களுக்கு வீண் அலைச்சல், வேலை பளு ஆகியவை அதிகரிக்கும். வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நன்மை தரும்.

## கும்பம்

இந்த மாதம் தடைபட்ட காரியங்களில் இருந்த தடை நீங்கி நன்றாக நடந்து முடியும். கொடுக்கல், வாங்கலில் இருந்த சிக்கல் தீரும். எதிர்த்து செயல்பட்டவர்கள் விலகி சென்று விடுவார்கள். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். பொருளாதார நிலை உயரும். அரசியல் வாதிகளுக்கு நீண்ட நாட்களாக வரவேண்டி இருந்த பணம் வந்து சேரும். உங்கள் பணிகளில் பல குறுக்கீடுகள் வந்தாலும் அதை சாமர்த்தியமாக சமாளித்து வெற்றி காண்பீர்கள். பெண்களுக்கு எந்த ஒரு சின்ன வேலைக்காகவும் மிகவும் பாடுபட வேண்டி இருக்கும். எதிர்பார்த்த உதவிகள் தாமதமாக கிடைக்கும் பயணங்களின் போது கவனம் தேவை.வேலை காரணமாக வீட்டை விட்டு வெளியில் தங்க நேரலாம்.

## மீனம்

இந்த மாதம் தேவையற்ற மன சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். மற்றவர்களிடம் அனுசரித்து செல்வதன் மூலம் வீண் பிரச்சனை வராமல் தடுக்கலாம். சிறிய விஷயத்துக்கு கூட கோபம் வரலாம். கட்டுப்படுத்துவது நன்மை தரும். திடீர் பண தேவை உண்டாகலாம். பெண்களுக்கு கோபத்தை கட்டுப் படுத்துவதும் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பதும் நன்மை தரும். வீண் செலவை தடுக்க திட்டமிட்டு செயல் படுவது நல்லது. அடுத்தவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும்.


• 1 x Dahua 4 Channel Network Recorder
• 4 x Dahua 6MP Day & Night Camera with sound
• 1 x 1TB Hard drive
• 1 x Dahua UPS 600VA
• Cables, Accessories
$1350 INSTALLED
Standard Package
3 years Warranty on all products and labour.
All work carried out under insurance and
performed by licensed technicians.
• 1 x Dahua 8 Channel Network Recorder
• 6 x Dahua 6MP Day & Night Camera with sound
• 1 x 2TB Hard drive
• 1 x Dahua UPS 600VA
• Cables, Accessories
$1750 INSTALLED
Super Package
3 years Warranty on all products and labour.
All work carried out under insurance and
performed by licensed technicians.
• 1 x Dahua 8 Channel Network Recorder
• 8 x Dahua 6MP Day & Night Camera with sound
• 1 x 3TB Hard drive
• 1 x Dahua UPS 600VA
• Cables, Accessories
$2550 INSTALLED
Ultra Package
3 years Warranty on all products and labour.
All work carried out under insurance and
performed by licensed technicians.
Other Services
IP/HD CCTV Systems | Security Alarm | Alarm Monitoring | Access Control | Security Fog System
Data & Tele-communication | Video Intercom | Smart Home | Solar CCTV /Ducted Vacuum | Digital TV Antena
NS Systems SECURITY
0447 533 555
www.nssystems.com.au
UTECH SECURITY Corporate Group
We are registered and licensed by Victoria Police. Private security Business License: 910-932-10S
info@nssystems.com.au
PO BOX 633, Noble Park, VIC 3174


Transco™
CARGO
இனிய புது வருட வாழ்த்துக்கள்!
புதுவருட அட்டவணை

| MONTH | FINAL CUT-OFF DATE | EST ARRIVAL IN SL |
|---|---|---|
| January | 2021-01-02 | 2021-02-09 |
| January | 2021-01-09* | 2021-02-16 |
| January | 2021-01-16 | 2021-02-23 |
| January | 2021-01-23* | 2021-03-02 |
| January | 2021-01-30* | 2021-03-09 |
| February | 2021-02-06 | 2021-03-16 |
| February | 2021-02-13* | 2021-03-23 |
| February | 2021-02-20 | 2021-03-30 |
| February | 2021-02-27* | 2021-04-06 |
| March | 2021-03-06 | 2021-04-13 |
| March | 2021-03-13* | 2021-04-20 |
| March | 2021-03-20 | 2021-04-27 |
| March | 2021-03-27* | 2021-05-04 |
| April | 2021-04-10* | 2021-05-18 |
| April | 2021-04-17 | 2021-05-25 |
| April | 2021-04-24* | 2021-06-01 |

* Only at Campbellfield & Dandenong Transco offices.
Door Delivery Anywhere in Sri Lanka
# 1
FREIGHT FORWARDER
FROM AUSTRALIA TO SOUTH ASIA
Transco CARGO
Australia's Number One Freight Forwarder to South Asia
BUY 2 BOXES and get the 3RD BOX FREE
45 Adrian Rd, CAMPBELLFIELD - (03) 9357 7228
206-208 Discovery Road, DANDENONG SOUTH - (03) 9703 2255
follow us on
We love to deliver
SYDNEY - 02 9897 0004 | BRISBANE - 07 3219 0203 | ADELAIDE - 08 8322 8825 | PERTH - 08 9452 7707 | CANBERRA - 02 62821905 | DARWIN - 08 79790002 | TASMANIA - 03 90174167
1300 1 TRANSCO (1300 187 267)
WWW.TRANSCOCARGO.COM.AU